விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 28 செவ்வாய்க்கிழமை (11.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 174

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## 13 ஆவது திருத்தத்தை வலிதற்றதாக்க எதிர்ப்பு

### வெள்ளிக்கிழமை மன்றம் முயற்சி

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13-வது திருத்தச் சட்ட மூலத்தை வலிதற்றதாக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புக்கள் எதிர்க்க வேண்டும் என வெள்ளிக் கிழமை மன்றம் வலியுறுத்தியுள்ளது.**

வெள்ளிக்கிழமை மன்றத்தின் சார்பில் ஜயந்த தனபாலவும், பேராசிரியர் சாவித்திரி குணசேகரவும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் வட மாகாண சபைத் தேர்தலை நீதியானதும், சுதந்திரமானதுமான முறையில் நடத்துவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் இவ்வறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாகாண சபைகளுக்கு ஏற்கெனவே அதிகாரங்களை வழங்கியுள்ள 13வது திருத்தச் சட்டமூலத்தை வலிதற்றதாக்க எடுக்கப்படும் அரசாங்கத்தின் முயற்சிகள் தொடர்பில் இவ்வமைப்பு ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

அதேவேளை, 13-வது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் முன்மொழியப்பட்டுள்ள திருத்த வரைவு, மத்திய அரசு மாகாண சபைகள் மீது அதிகாரம் செலுத்த வழிவகுக்கும் என இவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

இவ்வறிக்கையில், சூரிய விக்கிரமசிங்க, கலாநிதி ஜெயமபதி (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பிரச்சினையில் இரட்டை வேடமிடுவது யார்?

### கேள்வி எழுப்புகிறார் கலைஞர்

இலங்கைப் பிரச்சினையில் இரட்டை வேடம் போடுவது மத்திய அரசா அல்லது ஜெயலலிதாவா என கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில், இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார். அதில்,

இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு இரட்டை வேடம் போடுவதாக ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஜெயலலிதா பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் உள்ள மற்ற உணர்வுகளைத் திமுக மதிக்கின்றது.

இலங்கை வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பது பற்றிதிமுக உணர்வும்அதுதான்.

ஆனால், பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி இலங்கை இராணுவத்தினருக்கு தமிழகத்தில் பயிற்சி அளிக்க மாட்டோம் என்று உறுதி அளித்து (19ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை பாதிக்கும்!

### ஆயர்கள் பேரவை சுட்டிக்காட்டு


மாகாணசபை முறைமையில் மாற்றம் ஏற்படுத்தினால் சமாதானத்தை பாதிக்கும் என கத்தோலிக்க பேராயர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

மாகாண சபை முறைமையில் மாற்றம் செய்தால் அது வென்றெடுக்கப்பட்ட சமாதானத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ளது.

இவ்வாறு மாற்றம் செய்வதன் மூலம் அதிகாரம் ஒரு இடத்தில் மையப்படுத்தக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இதனால் சர்வதேச சமூகம் இலங்கை விவகாரங்களில தலையீடு செய்யக்கூடிய சாத்தியம் ஏற்படும் என தெரிவித்து (20ஆம் பக்கம் பார்க்க)

## அத்வானி இராஜினாமா



(புதுடில்லி)

இந்தியாவின் பிரதான எதிர்க் கட்சியின் மூத்த தலைவரான எல்.கே.அத்வானி கட்சியின் அனைத்து பதவிகளிலிருந்தும் ராஜினாமா செய்துவிட்டார்.

கட்சியின் சர்ச்சைக்குரிய அரசியல்வாதி, குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி எதிர்வரும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டதை அடுத்து அத்வானியின் இந்த முடிவு வருகிறது.

கட்சி போகும் திசையைப் பற்றி தான் அதிருப்தி அடைந்திருப்பதாகவும், கட்சியின் தலைவர்களில் பெரும்பாலானோர் தங்களது தனிப்பட்ட அரசியல் வாழ்க்கைக்கான திட்டங்களையே முன்கொண்டு செல்வது குறித்து தான் கவலை அடைவதாக (19ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்தோர் தொகை 42 ஆக அதிகரித்தது

பலபிட்டிய பிரதேசத்திலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் 11 பேரின சடலங்கள் நேற்றுக் காலை குறித்த பிரதேசத்தில் கரையொதுங்கியுள்ளன. இதன்படி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 42 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக கடலுக்கு மீன் பிடிக்கச்சென்ற மீனவர்கள்பலர காணாமல் போயிருந்தனர்.

இந்நிலையில், 31மீனவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்தது.

அத்துடன்மேலும் 29 மீனவர்கள் காயமடைந்துள்ளனரஎன்றும் 31பேரை தொடர்ந்தும தேடி வருவதாகவும் அந்நிலையம் குறிப்பிட்டிருந்தது.

இவ்வாறு உயிரிழந்த மீனவர்களில் பெரும்பாலானவர்கள் பலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஏற்கெனவே அப்பிரதேசத்தைச் சேர்ந்த 16 பேரின் சடலங்கள் மீட்கப்பட்ட நிலையிலேயே நேற்றுக் காலை மேலும் 11 பேரின் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.

இதேவேளை, 'மேலும் சில மீனவர்களின் சடலங்கள் கடலில் மிதந்துகொண்டிருப்பதாகவும் அவற்றை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவ (19ஆம் பக்கம் பார்க்க)

## ஊரதீவில் விபத்து குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டையிழந்த ஆட்டோ வீதிக்கு அருகே இருந்த மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஆறு பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் புங்குடுதீவு ஊரதீவுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் புங்குடுதீவு கேரதீவைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை பரமேஸ்வரன் (வயது -54) என்ற குடும்பஸ்தரே (20ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிப பெண் படுகொலை!

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை ஊரணி பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் காணப்பட்ட வயோதிபப் பெண் ஒருவரின் சடலத்தினை வல்வெட்டித்துறை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.


அதே இடத்தினைச் சேர்ந்த ஏழு பிள்ளையின் தாயாரான சோதிலிங்கம் தெய்வமலர் (வயது 64) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபரின் ஏழு பிள்ளைகளும் திருமணம் முடித்து வெவ்வேறு இடத்தில் வாழ்ந்து வரும் நிலையில் இவர் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார்.

இவரது மருமகன் நேற்று காலை 10 மணியளவில் வீட்டுக்குச் சென்று பார்த்தபொழுது வயோதிபப் பெண் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் (19ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுக்களில் மாற்றம் தேவை - ரணில்



அமைச்சுக்களை ஒதுக்கும்போது புதிய தராதரங்களைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று பிரதான எதிர்க் கட்சி (19ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ பயிற்சிக்கு எதிராகப் போர்!

### திராவிடர் கழகம் ஏற்பாடு

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகேயுள்ள வெலிங்டன் இராணுவ முகாமில் இலங்கை இராணுவ அதிகாரிகள் 2 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதனைக் கண்டித்து இராணுவ கல்லூரியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவதற்காக ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், நாம் தமிழர் கட்சியினர், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் நேற்றுமுன்தினம மாலை அங்கு சென்றனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - யாழ் அதிவேகப் பாதை இந்தியாவிற்கு பாரிய அச்சுறுத்தல்

### கூட்டமைப்பு குற்றச்சாட்டு

சீன உதவியுடன் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள கொழும்பு - யாழ்ப்பாணம் அதிவேக விரைவுப் பாதை குறித்த கவலைகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு வெளிப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான அதிவேக விரைவுப் பாதை அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் சீனாவுடன் இலங்கை கையெழுத்திட்டுள்ளது. அண்மையில் சீனா சென்றிருந்த ஜனாதிபதி இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

இலங்கை அரசின் இந்தச் செயற்பாடானது வடக்குக்கு மிக அருகில் தலைமன்னாரில் இருந்து சுமார் 32 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும்.

இவ்வாறான நிலையில் வடக்கில் மிகப்பெரிய கட்டுமானப் பணிகளை இலங்கை அரசு சீனாவிடம் அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் வழங்கியுள்ளது.

சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இவ்வாறான பாரிய வேலைத்திட்டங்கள் நிச்சயம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே அமையும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

அபிவிருத்தி என்ற போர்வையில் எந்த வெளிநாட்டு படைகளையும் வடக்கில் நாங்கள் அனுமதிக்க விரும்பவில்லை. தன்னுடைய சொந்த திட்டமிடல்களின் மூலமாகவே வடக்கு மாகாணம் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த அனுமதிக்க வேண்டும் எனவும் அவர் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த.சா.த பெறுபேற்றில் வேம்படி மகளிர் கல்லூரி முதலாமிடம்

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

2012-ம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் யாழ்.வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை தேசிய ரீதியிலே 10-வது இடத்தையும் தமிழ் மொழி மூல பாடசாலைகளிலே முதலாவது இடத்தையும் பெற்றுச் சாதன்ன படைத்துள்ளது என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தெரிவித்தார்.

யாழ்.வலய பாடசாலைகளிலேயிருந்து 2012-ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த (சாதாரண தரம்), க.பொ.த. (உயர் தரம்) ஆகிய பரீட்சைகளில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களும் அவர்களை வழிநடத்திய ஆசிரியர்களும் மாணவர்கள் கல்விகற்ற பாடசாலையின் அதிபர்களை கௌரவிக்கும் நிகழ்வும் கலாசார நிகழ்வும் நேற்றுப் பிற்பகல் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் அதாவது 2012-ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் எமது யாழ்.வலயம் 67.7 சதவீத சித்திபெற்று இருக்கின்றது. 53 மாணவர்கள் 9 ஏ சித்தியினைப் பெற்றுக் கொண்டதோடு 57 மாணவர்கள் 8 ஏ, ஒரு பி சித்தியினைப் பெற்றிருக்கிறார்கள். உண்மையிலேயே மிகப்பெரிய எண்ணிக்கையிலான மாணவர்கள் இவ்வாறான மிகச் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

இதேவேளை, யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை தேசிய ரீதியிலே 10-வது இடத்தையும், தமிழ்மொழி மூல பாடசாலைகளிலே முதலாவது இடத்தையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

இதனைவிட கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையிலே சித்தியடைந்த 68 மாணவர்கள் 3 ஏ சித்திபெற்று இருக்கிறார்கள். அத்துடன் மாகாண மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் முதன்மை நிலைகளை யாழ்.வலய பாடசாலை மாணவர்கள் பெற்றிருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வட மாகாண கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ-6)

## நிகழ்வு நேரம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வீரசிங்க மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு நடை பெறவிருந்த ஜனாதிபதி புலமைபரிசில் வழங்கும் நிகழ்வும் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்பகல் 2 மணிக்கு மாற்றப்பட்டுள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (எ-11)

## உண்டியல் திருடன் வசமாக மாட்டினார்

(கரவெட்டி)

பொலிகண்டி சிறி பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நேற்று காலை 9.30 மணியளவில் உண்டியலை உடைத்து திருடன் ஒருவன் திருட முற்பட்ட வேளை அவ்ஊர் பொது மக்களிடம் வசமாக மாட்டிக் கொண்டான்.

திருடனை ஊர் பொதுமக்கள் வல்வெட்டித்துறை பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-24)

# 15 வயதுச் சிறுமி கடத்தல் வயோதிபப் பெண் கைது

15 வயது சிறுமியை கடத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் 65 வயதான பெண்ணொருவரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சிறுமியை மூன்று பேர் கொண்ட கும்பல் முச்சக்கர வண்டியில் கடத்திச் சென்று வல்லை வெளியில் வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் வயோதிப பெண்ணையே பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.நல்லூர் கொண்டலடி பகுதியைச் சேர்ந்த 15 வயதான சிறுமியை நல்லூர் பகுதியில் வைத்து மூன்று பேர் கொண்ட குழுவி னர் முச்சக்கரவண்டியில் நேற்றுமுன்தினம் கடத்தி சென்றுள்ளனர். கடத்தி சென்ற கும்பலில் பெண்ணொருவர் உட்பட இரு ஆண்களும் இருந்ததாக தெரிவிக்கப்படு கின்றது. அந்த குழுவினர் சிறுமி அணிந் திருந்த சங்கிலி, தோடுகள், நகைகளை பறித்துவிட்டு ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் வைத்து சிறுமியை தூக்கி வீசி விட்டு சென்றுள்ளனர்.

கடத்தி சென்று தூக்கி வீசப்பட்ட சிறுமி தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். குறித்த சம்பவம் தொடர்பாக சிறுமியின் தாயார் யாழ். சிறு குற்றத்தடுப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அச்சுவேலி வடக்கு பகுதியைச் சேர்ந்த 65 வயதான பெண்ணை யாழ்.சிறு குற்றத்தடுப்பு பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தனிப்பட்ட பகைமை காரணமாகவே குறித்த சிறுமி கடத்தப்பட்டிருப்பதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-11)

# இலங்கை தேசிய கீதத்திற்கு பதிலாக ஹிந்தி இசை; ஐ.சி.சி கவலை

(டுபாய்)

ஐ.சி.சி.சம்பியன்ஸ் கிரிக்கெட் கிண்ண சுற்றுத் தொடரின் ஆரம்ப நிகழ்வின் போது இலங்கை தேசிய கொடி எடுத்துச் செல்லும் போது ஏற்பட்ட தவறுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை கவலை வெளியிட்டுள்ளது.

போட்டியின் ஆரம்ப நிகழ்வின் போது இலங்கை தேசிய கொடி எடுத்துச் செல்லும் போது நாட்டின் தேசிய கீதத்திற்கு பதிலாக ஹிந்திப்பாடல் ஒன்று ஒலிபரப்பப்பட்டது.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது தவறுதலாக நடந்த விபத்து ஒன்று என சர்வதேச கிரிக்கெட் சபை கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபைக்கு ஐ.சி.சி. பணிப்பாளர் கிரிஸ் ரெடிலி எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் அவர் உரிய அதிகாரிகளிடம் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த அமைச்சர் விமல் வீரவன்ச, இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் முதுகெலும்பு இல்லாதவர் என்று விமர்சித்திருந்தார்.

அத்துடன் ஐ.சி.சி. சம்பியன் கிரிக்கெட் சுற்றுத் தொடரிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். (எ-11)

# நேர்மையாக இருந்ததால் பலதை இழந்து விட்டேன்

## ஆனந்தசங்கரி கவலை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியை நான் உத்தமர் என்று சொன்னால் அது உண்மையாகிவிடுமா? எனக் கேள்வி எழுப்பிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி இந்த நாட்டில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக ஜனநாயகம் இல்லை எனவும் உண்மையை பேசியதாலும் நேர்மையாக நடந்தாலும் பலவற்றை இழந்துவிட்டதாகவும் மிகவும் கவலையுடன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகங்கள் உண்மையை எழுத வேண்டும். இனத்துரோகி பட்டத்தை தந்து ஆண்டாண்டு காலமாக குற்றவாளியாக காட்ட முற்படுகின்றன. தேவையில்லாமல் என்மீது அவதூறுகளை ஏற்படுத்த வேண்டாம். நேர்மையாக இருந்ததாலும் உண்மையை பேசியதாலும் பலவற்றை இழந்துவிட்டேன். எனவே உண்மையை எழுதுங்கள் என ஊடகங்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் தேவை ஏற்படும்போது பலருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் எழுதியுள்ளேன். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் எழுதியுள்ளேன். ஜனாதிபதிக்கு கடிதம் எழுதும்போது அவரை ஒரு உத்தமர் போன்று கூறி விடயங்களை எடுத்துக் கூறுவதுண்டு. நான் ஜனாதிபதியை உத்தமர் என்று கூறினால் அது உண்மையாகிவிடுமா? இது பைத்தியக்காரர்களுக்குப் புரியவில்லை.

கடைசியில் அப்பாவித் தமிழ் மக்கள் 40 ஆயிரம் பேர் வரை முள்ளிவாய்க்காலில் இறுதி இரண்டு நாட்களில் மட்டும் மாண்டு போனார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## ஆசிரியர் சங்க விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் கலைப்பீட பொது அறையில் இன்று காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளையும்,நாளை மறுதினமும் பல்கலைகழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கூட்டத்தில் பங்கு கொள்வதா பங்கு கொள்வதில்லையா என்பது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதாகவும் இக்கூட்டத்தில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (எ-4)


**பிள்ளையார் இன்** — 25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 120/- | மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 120/-

(c-3499) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

**கோழி இறைச்சி விற்பனைக்கு**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அதி நிறை கூடிய "புறொயிலர்" இறைச்சிக் கோழி தினமும் காலை 6.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை சுத்தம் செய்யப்பட்டு (இறைச்சிக் கோழி "புறொயிலர்" 1 Kg– ரூ.475/–) விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம். (2982)




**தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வைத்தியசாலைக்கு பின்வரும் ஆட்கள் தேவையாகவுள்ளது.

- தாதியர்கள்:- (அனுபவமுள்ளவருக்கு முன்னுரிமை)
- சாரதி:- 05 வருட அனுபவம் (கார், வான், முச்சக்கரவண்டி)

உடனடி தொடர்புகளுக்கு: 0777 750391 (சி-3580)




**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள 7 SRI xxxx தொடர் இலக்கம் கொண்ட OXFORD கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0777 750391 (சி-3581)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சரியான முடிவு எடுப்பது எப்படி?

மற்றவர்களுக்கு குல்லா போட்டே நம்மில் பெரும்பாலானோர் பழக்கப்பட்டுவிட்டோம் .அவ்வாறு செய்தால் தான் நாம் முன்னேற முடியும் என்று நம்பி ஏமாறுகிறோம்.

ஆனால் முன்னேற துடிப்பவர்கள் தமக்குத் தாமே தொப்பி அணிந்துகொள்ள வேண்டும் என்கிறார் ஓர் அறிஞர்.

" சரியான முடிவு எடுப்பதற்கு ஆறு கற்பனைத் தொப்பி கள் அவசியம் "என்கிறார் எட்பேர்ட் டி. போனா.இது அவருடைய பிரபலமான ஒரு கருத்து ஆகும்.

"Lateral Thinking"என்பது சிந்தனையிலே புதிய வகையான சிந்தனையாகும். அந்த வார்த்தையை உருவாக்கியதே அவர்தான்.

நாம் நமது வாழ்க்கையில் சரியான முடிவுகள் எடுப்ப தற்கு அவருடைய இந்தக் கருத்து மிகவும் உபயோகமாக இருக்கும்.

முக்கியமான முடிவுகளை எடுக்கும் போதெல்லாம் இந்தக் கற்பனைத் தொப்பிகள் ஆறினையும் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக அணிந்து கொண்டு முடிவு எடுக்க வேண் டும்.

முதலில் வெள்ளைத் தொப்பி– முடிவெடுப்பதற்கு முதல் தேவை சரியான தகவல்கள் .தகவல்களைத் திரட்டுவது தான் வெள்ளைத் தொப்பி அணிவதன் நோக்கம்.

இரண்டாவது பச்சைத் தொப்பி– இது கற்பனை சக்தியைக் குறிக்கிறது. இந்தக் தொப்பி கிடைத்த தகவல்களை வைத்துப் புதுப்புது யோசனைகளை உற்பத்தி செய்யத் தூண்டுகிறது.

மூன்றாவது மஞ்சள் தொப்பி– இதன் வேலை என்னவென்றால் பச்சைத் தொப்பி கொடுத்த யோசனைகளில் எது நடைமுறைக்குச் சரிப்பட்டுவரும், எது சரிப்பட்டு வராது என்பதை சரியாக இனம் கண்டு ஏனைய யோசனைகளையெல்லாம் வடிகட்டிவிடும்.

நான்காவது கறுப்புத் தொப்பி– இது நியாய தர்மங்களைப் பாதுகாக்கும் தொப்பி. நடக்கக் கூடிய நமக்கு மட்டும் நன்மை தரக்கூடிய சுயநலமான யோசனையாக இருந்தால்" இது சமூகத்திற்குக் கேடானது.ஆபத்து நிறைந்தது"என்று இந்தத் தொப்பி எச்சரிக்கும்.

ஐந்தாவது சிவப்புத் தொப்பி– இந்தத் தொப்பிக்கு தக்க அறிவு, தகவல் அறிவு பற்றியெல்லாம் தெரியாது. ஏதோ எ என் மனதுக்குப் படுகிறது... இது சரியாக வருகிறது என்று சொல்வோம் அல்லவா? இந்த உள்ளுணர்வு Intuition தான் சிவப்புத் தொப்பி.

ஆறாவது நீலத் தொப்பி– ஏனைய ஐந்து தொப்பிகள் எடுத்து வைத்த வாதப் பிரதிவாதங்களை ஆராய்ந்து சரியான தெளிவான இறுதி முடிவு எடுக்கும் தொப்பி இது. இதுதான் எட்வேர்ட்டி டி.போனா கூறும் கருத்து.இதைச் சுருக்கமாகப் புரிந்து கொள்வது எப்படி?

இப்போது ஏதோ ஒரு விடயத்திற்காக நாம் முடிவெடுக்க வேண்டும் என்று வைத்துக் கொள்வோம்.

முதலில் அது சம்பந்தப்பட்ட தகவல்கலைத் திரட்ட வேண்டும். அந்தத் தகவல்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு புது யோசனைகளை உருவாக்க வேண்டும் .இதில் உபயோகப்படாத யோசனைகளைக் கூட ஆராய வேண்டும்.

ஒரு விடயம் நமக்கு நல்லது என்று தோன்றினாலும் அதனால் மற்றவர்களுக்கு ஏதும் இடையூறு இருக்குமா? என்று சிந்திக்க வேண்டும்.அதன்பின் நம் உள்ளுணர்வு என்ன சொல்கிறது என்று பார்க்க வேண்டும். கடைசியாக எல்லாவற்றையும் ஆராய்ந்து ஒரு நல்ல தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டும்.

இதுதான் எட்வேர்ட் டி.போனா சொல்லும் ஆறு வகையான சிந்தனைத் தொப்பிகள் .

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் சில சந்தர்ப்பங்களில் இப்படி வரிசையாகப் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

உடனடியாக முடிவெடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் பல உண்டு. உதாரணமாக காற்பந்தாட்டத்தில் பந்தை உதைப் பதா? அல்லது தடுப்பதா? என்பது போன்ற நேரங்களில் சிவப்புத் தொப்பிதான் சரியானது.

அதாவது உள்ளுணர்வு .அது கூர்மையாக இருக்க வேண்டும். அதற்கு மனம் தெளிவாக இருப்பது மிக மிக அவசியம்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மீள்குடியேறிய எமக்கு 10 தகரம் மட்டும் வழங்கினால் போதுமா?

## கேப்பாப்பிலவு மக்கள் கேள்வி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கேப்பாபிலவு மாதிரி கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி அல்லலுற்ற வாழ்க்கை வாழ்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த போர்ச்சூழலில் இடம் பெயர்ந்து நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருந்து கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதி மீள்குடியேற்றம் செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் 10 தகரங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த கிராமத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு 136 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் ஒரு குடும்பத்திற்கு கூட நிரந்தர வீடு வழங்கப்படவில்லை.

10தகரங்களை மட்டும் வைத்து தற்காலிக வீடுகளை எவ்வாறு அமைப்பது என்ற கேள்வியுடன் அப்பகுதி மக்கள் வாழ்கின்றனர்.ஒரு குடும்பத்திற்கு 1/4 ஏக்கர் காணி வீதம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால்அக்காணிகளை துப்பரவு செய்வதற்கேற்ற மண்வெட்டி, கோடரி மற்றும் ஏனைய உபகரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை .

மேலும் இப்பகுதியில் வரட்சி காலத்தில் குடிநீர் வசதி இன்றி பெரு ம் அல்லற்பட வேண்டியுள்ளது. மேலும் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு நடந்து சென்று குடிநீரை பெற்றுக் கொள்ள வேண்டியுமுள்ளது.

மலசலகூட வசதி, மின்சார வசதி, போக்குவரத்து வசதி, சுகாதார வசதி என்பவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மேலும் வாழ்வாதாரத்தை முன்னெடுப்பத ற்கான தொழில் வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. உள்வீதிகள் புனரமைக்கப்படவில்லை சுமுர்த்தி நிவாரணம்கூட வழங்கப்படவில்லை.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 5 மாதங்கள் கடந்தும் குடும்ப அட்டையும் வழங்கப்படவில்லை.

இவர்களுக்கான மீள் குடியேற்றப் பணமான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. எனவே இத்தனை தேவைகளுக்கு மத்தியில் அவல வாழ்க்கை வாழ்ந்து வரும் இம்மக்களின் நிலையை துறைசார்ந்த அதிகாரிகள் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென அப்பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(அ-3-267)

# சீரடி சாயி மந்திர் மணவாளக் கோலவிழா

நல்லூர் சீரடி சாயி மந்திர் மணவாளக் கோல விஞ்ஞாபனம் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு 108 சங்காபிஷேகம் இடம்பெற்று பின்னர் வீதி உலா வரவுள்ளது.

இதற்கமைய வீதியுலா இரவு 7 மணிக்கு ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி மருதடி , றக்கா வீதியினூடாக இராசாவின் தோட்டம், நாவலர் வீதியூடாக ஆலயத்தை வந்தடையவுள்ளது. அதனை தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகமும் இடம்பெறவுள்ளது. (அ-136)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80-120 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 100 |
| தக்காளி | 80 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 40 |
| கோவா | 120 | 100 | 120 |
| கரட் | 180 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 70 | 60 | 60 |
| வாழைக்காய் | 30 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 120-150 | 140-200 | 120-200 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | -- | 100 |
| பயற்றங்காய் | 80 | 60 | 60 |
| லீக்ஸ் | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 80 | 100 | 120 |
| கறிமிளகாய் | 140 | 140 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 320 |
| போஞ்சி | 140 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 90 | 120 | 100 |

# இராசி பலன்

**11.06.2013**

**(வைகாசி 28, செவ்வாய்க்கிழமை)**

**சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு**

**திருதியை பின்னிரவு 3.15 மணிவரை**

**பூநர்பூசம் பின்னிரவு 4.01 மணிவரை**

**இராகுகாலம் 2.52-4.22 மணிவரை**

**சுபநேரம் 10.22 - 11.52 மணிவரை**

**மேடம்** உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், தொழில் வளர்ச்சி அதிகரிக்க தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்துவ முன்வருவர்.

**இடபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு செல்லும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**கடகம்** அன்றாட பணிகள் நன்றாக நடை பெற இறைவனைப் பிராத்த்திப்பீர்கள், அலைச்சல்களால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாள்வது நல்லது

**சிங்கம்** தொலைபேசி வழியாக கேட்கும் செய்திகளால் சந்தோஷம் கிடைக்கும், சிறப்பான நாள் பணப்புழக்கம் அதிகரிக்கும், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும், அந்நியர் உதவியுண்டு

**துலாம்** விட்டுபோன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், தடைகளைத் தகர்த்தெறிந்து தன்னிறைவு காணும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்

**விருச்சிகம்** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,அனுசரித்து செய்வதன் மூலம் ஆதாயம் பெறுவீர்கள், வரவும் செலவும் சமமாகும், கௌரவக் குறைவான சம்பவங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், தொலைபேசித்தகவல்கள் மகிழ்ச்சி தரும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், செய் தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், எடுத்த காரியங்களில் உடனுக்குடன் கைகூடும்.

**கும்பம்** வியாபார விருத்தியுண்டு, பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் மேலோங்கும், பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** பயணங்களால் பலனுண்டு , நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள் தேவையற்ற சஞ்சலங்கள் மனதில் தோன்றும், தொழில் நன்மையுண்டு, காரியங்கள் கைகூடும் வரை கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டோ தரம்புரண்டதில் மூவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)


பயணிகளுடன் சென்ற ஆட்டோ ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.கரந்தன் சந்தி புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் ஏழாலை தெற்கு மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த பத்மலிங்கம் அனெஸ்ரின் (வயது 20), புகையிரத வீதி சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த சந்திரசேகரம் சுஜீந்திரன் (வயது 27), ஊரெழு பகுதியைச் சேர்ந்த துரைசாமி லோகாஸ் (வயது 23) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)



நன்றி: ஐலண்ட்




## சிவதொண்டன் சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தினரால் வெளியிடப்படும் சிவதொண்டன் சஞ்சிகையின் மே, ஜுன் மாதங்களுக்கான மலர் வெளிவந்துள்ளது.

சைவ ஆன்மீக வரலாறுகளைத் தாங்கி வெளிவந்திருக்கும் இம் மலரில் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல படைப்புக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## முருகமூர்த்தி ஆலய வருடாந்த பொங்கல்

(வேலணை)

சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 21 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் சப்பறத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. தேர்த்திருவிழா, மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும் தீர்த்தம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கும் இடம்பெறவுள்ளதாக அறங்காவற் சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

## நேர்முகத்தேர்வு திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2013 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டுக்கான ஆங்கில வருகை தரு விரிவுரையாளர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் நடைபெறும் என அந்நிறுவனத்தின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி நேர்முகத் தேர்வு நாளை புதன்கிழமை நடைபெறவிருப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இவ்வாறு திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# செம்மண்பிட்டி வீதியில் இறைச்சிக் கழிவுகள்

## மூக்கைப் பொத்தும் மக்கள்

(கரணவாய்)

பருத்தித்துறை மாதனைப் பகுதியிலிருந்து செம்மண்பிட்டிக்கு செல்லும் வீதியில் உள்ள தனியார் காணிகளில் தொடர்ச்சியாக மாட்டு இறைச்சிக் கழிவுகள் வீசப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு வீசப்படும் கழிவுகளை நாய்கள், காகங்கள் இழுத்துச் சென்று அத்னைச் சுற்றியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் ஆங்காங்கே போடுவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது.

மேலும் இக்கழிவுகளை பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட்ட மீன் சந்தையில் மாட்டிறைச்சிக் கடை வைத்திருப்பவர்கள்தான் வீசுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இதனை நிறுத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகளை துறைசார்ந்த அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-74)

## இன்னிசை கச்சேரியும் சொற்பொழிவுகளும்

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவ கால தெய்வீக நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் தினமும் மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

இதற்கமைய எதிர்வரும்15 ஆம் திகதி சனிக்கிழமை **மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்** எனும் கருப்பொருளிலான சொற்பொழிவை சைவப்புலவர் அனுசாந்தனும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை **மனதை வெல்வோம் உலகை வெல்வோம்** எனும் கருப்பொருளில் சொற்பொழிவை பிரமச்சாரிய ஜாக்கிரத் சைதன்யவும் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து 17 ஆம் திகதி திங்கட்கிழமை **சித்தியும் புத்தியும்** எனும் தலைப்பிலான சொற்பொழிவை சிவத்திரு.தி.சிவதெட்சணாமூர்த்தியும் மறுநாள் **மேன்மைகொள் சைவநீதி** என்ற கருப்பொருளில் சைவ புலவர் ச.முகுந்தனும் ஆற்றவுள்ளனர்.

19ஆம் திகதி புதன்கிழமை இன்னிசைக் கச்சேரியும் மறுநாள் வியாழக்கிழமை **தானமும் தவமும்** எனும் கருப்பொருளிலான சொற்பொழிவை ஆசிரியர் கு.பாலசண்முகனும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை **தொண்டருக்கு உண்டு** எனும் கருப்பொருளில் சொற்பொழிவை ச.லலீசனும் ஆற்றவுள்ளரென ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

## ஆயுர்வேத மருந்து

# விற்பனையாளர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய வைத்தியத்துறை மேம்படுத்தும் எதிர்காலத் திட்டத்தின் அடிப்படையில் சுதேச வைத்திய நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆயுர்வேத மருந்து விற்பனை ஸ்தாபன உரிமையாளர்களுக்கான தர நிர்ணய விழிப்புணர்வு கருத்தரங்கு நாளை புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் முற்பகல் 9 மணிக்கு பண்ணையில் அமைந்துள்ள சுகாதாரக் கிராமத்தின் பிராந்திய பயிற்சி நிலை யத்தில் நடை பெறவுள்ளது.

தரமான மருந்துகளையும் சேவைகளையும் பயனாளிகள் பெற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு தரம் பேணுவதற்கு அமைவாகவும் அதற்கேற்ப பதிவுகளையும் வசதிகளையும் வழங்கும் நோக்கிலும் தமிழ் மொழியில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

மேலும் இவ்விழிப்புணர்வு கருத்தரங்கிற்குரிய அழைப்புக் கடி தங்கள் உரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் இதுவரையிலும் அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதவர்களும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் தொழில்நுட்ப பிரிவு ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)


யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் க.பொ.த. உயர்தரம் 2015 வகுப்புக்களில் தொழில்நுட்பப் பிரிவு அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

கல்வி அமைச்சினால் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டு பிரதேச ரீதியாக தெரிவு செய்யப்படும் பாடசாலைகளில் மேற்படி தொழில்நுட்பப் பிரிவு நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதனடிப்படையிலேயே வடமராட்சி பிரதேசத்தில் கலவன் பாடசாலையாகவுள்ள யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டு இப்பாடப்பிரிவு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மேலும் இத் தொழில்நுட்பப் பிரிவில் இணைந்து கற்க விரும்புகின்ற தகுதியுடைய மாணவர்கள் தத்தம் பாடசாலை அதிபர்களினூடாக விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என பிரதி அதிபர் ஜி.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார். (அ-5)



யாழ்.கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் கலாசார நிகழ்வும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று பிற்பகல் யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 2012 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களும் 2012 ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும் உயர் பெறுபெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கொண்ட பாடசாலையின் அதிபர்களும் கௌரவிக்கப்பட்டதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுக்குள வாய்க்கால் வீதி பத்து நாட்களாக மூடப்பட்டுள்ளது

## பயணிகள் சிரமம்

(புளியம்பொக்கணை)

வட்டக்கச்சியில் இருந்து கல்மடு செல்லும் இரணைமடுகுள வாய்க் கால் வீதி கடந்த 10 நாட்களாக முடப்பட்டுள்ளமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள் கின்றனர். இரணைமடுகுள நீர் வீதியை ஊடறுத்துப் பாய்வதா லேயே இவ்வீதி மூடப்பட்டுள்ளது. இவ்வாறு வீதி மூடப்பட்டுள்ள மையால் அவ்வீதியால் பயணிப் போர். மாற்றுவழியைப்பயன் படுத்தவேண்டியுள்ளது.

எனவே, ஊடறுத்துப் பாயும் குள த்து நீரைக் கட்டுப்படுத்தி வீதியைத் திறந்து போக்குவரத்திற்கு உதவ துறைசார்ந்த அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனபயணிகள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார். (அ-3-263)


**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(சி/3573)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER





**சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்**

எமது பாடசாலையில் 27 வருடங்கள் விஞ்ஞான பாடப் பொறுப்பாசிரியராக கடமையாற்றி தனது 60 ஆவது வயதில் ஓய்வுபெறும்

**திருமதி மலர்தேவி அருணாசலம் (SLTS-I)**

அவர்களை பல்லாண்டு காலம் பாரினில் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
(2995) யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்


### சிரார்த்த தினத்தை முன்னிட்டு வழிபாடு

அமரர் பேராசிரியர் அ.துரைராஜாவின் 19 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் இன்று செவ்வாய்கிழமை 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து இவரின் நினைவாக மரம் நாட்டு நிகழ்வும் நடைபெறும். (அ-5)


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>உயரம்: 5'7", கி.பா:3.5<br>தகைமை/தொழில்:PHD EngineerCanada Work Permit<br>தொ.இ:B1964 | பிறப்பு: 1987 இந்து(குருகுலம்)<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 5'5", 12 இல் சூ,செவ்<br>தகைமை/தொழில்: B.Com, Australia Citizen<br>தொ.இ:G1984 |
| பிறப்பு: 1982 இந்து (Pa)<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>உயரம்: 5'5", 12 இல் செவ்<br>தகைமை/தொழில்:பட்டதாரி ஆசிரியர்<br>தொ.இ:B1968 | பிறப்பு: 1975 இந்து(V)<br>நட்சத்திரம்: ரோகினி 2.<br>உயரம்: 4'10", கி.பா:29, 12இல் செவ்<br>தகைமை/தொழில்:A/L, நூலகர்<br>சைவபோசனம்<br>தொ.இ:G1988 |
| பிறப்பு: 1987 இந்து(செட்டி)<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5'9" 8 இல் சூ,செவ்<br>தகைமை/தொழில்:A/L, Web Designer (தனியார்)<br>தொ.இ:B1971 | பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>உயரம்:5'1", கி.பா:45, 2இல்செவ<br>தகைமை/தொழில்: HNDA முகாமைத்துவ உதவியாளர்<br>சைவபோசனம்<br>தொ.இ:G1989 |
| பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்:அத்தம் 3<br>உயரம்: 5'9" கி.பா:38<br>தகைமை/தொழில்:பட்டதாரி முகாமையாளர் UK (Not PR)<br>தொ.இ:B1972 | பிறப்பு: 1972 இந்து (V)<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>உயரம்: 5'6", கி.பா: 7.25<br>தகைமை/தொழில்: A/L,<br>சைவபோசனம்<br>தொ.இ:G1990 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி





**மஞ்சவனப்பதி முருகன் துணையுடன்**

யாழ்.மண்ணில் ...... ஓர் புதிய உதயம்

**சண்ஜெ பல்பொருள் வாணிபம்**

***Sunjeys Multi Marketing Center***

**Sunjeys Tourism இன் யாத்திரை**
வவுனியாவிற்கு அப்பால் உள்ள கோயில்களுக்கான யாத்திரை

Sunjeys Tourism ஊடாக 40 வயதிற்கு மேற்பட்டவருக்கான சுற்றுலா யாத்திரை இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

உணவு, தங்குமிடம், போக்குவரத்து (குளிரூட்டப்பட்ட தொலைக்காட்சி பஸ்.adjuestable seat) போன்ற வசதிகளுடனும் கீழ்க்காணும் இடங்களை சுற்றிப் பார்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

5 நாட்களுக்கும் — ரூபா 11 900/- மட்டுமே. — 20 பேர் மட்டும்.

**ஆரம்பம் : 14.06.2013 காலை 7 மணிக்கு**

மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கதிர்காமம், நுவரேலியா, கண்டி, மேற்குறிப்பட்ட இடங்களிலுள்ள முக்கிய வணக்கஸ் தலங்களுக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் செல்லலாம்.

தொடர்புகளுக்கு :
**Sunjeys Tourism**
713, ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
0777474111, 021 222 7070

- Fresh Vegetable
- Fresh Sea food, Mutton, Chicken (Ready to Cook)
- சகல வகையான பலசரக்குப் பொருள்களும் காகிதாகிகளும்

5000 இற்கு மேல் கொள்வனவுக்கு இலவச விநியோகம் (யாழ்.மாநகர சபை எல்லைக்குள்)

713, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 510 6445

**சண்ஜெ உணவகம் மற்றும் விருந்தினர் விடுதி (கிளை)**
**Sunjeys Food Land and Guest House (Branch)**

- குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத அறைகள்.
- முக்கியமாக யாழ்ப்பாண பாரம்பரிய சைவ, அசைவ உணவுகள்
- சகல வைபவங்களுக்கும் சைவ அசைவ உணவு ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொ.பே: 0776777500, 021 221 7070

500 ரூபாவுக்கு மேல் கொள்வனவுக்கு இலவச விநியோகம். (யாழ்.மாநகர சபை எல்லைக்குள்)

**சண்ஜெ பதிப்பகம் மற்றும் தொடர்பகம்**
**Sunjeys Printers and Publication**

- Photo Copy
- Fax
- Laminating
- Duplo Printing

தொ.பே: 021 221 7077

**சண்ஜெ உல்லாசப் பிரயாணம்**
**Sunjeys Tourism**

நாடு முழுவதுக்கான குளிரூட்டப்பட்ட 28 இருக்கைகள் உள்ள குளிரூட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டியுடனான பஸ் சேவைகள் 1 கி.மீ. 65ரூபா. வான் சேவையும் உண்டு.
தொ.பே: 0777474111




'U' try hard to serve U'

(சி-3578)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆம் திருத்தத்தை இரத்தாக்கும் தைரியம் அரசாங்கத்துக்கு இல்லை

## ஜே.வி.பி. முன்னாள் எம்.பி. லால் காந்த

(கொழும்பு)

13 ஆவது திருத்தச்சட்டத்தை இரத்து செய்யும் தைரியம் அரசாங்கத்துக்கு கிடையாது என ஜே.வி .பி. கட்சி தெரிவித்துள்ளது.

1987 ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சி செய்த எந்தவொரு அரசாங்கமும் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு மாற்று வழிகளை அறிமுகம் செய்ய முன் வரவில்லை என ஜே.வி. பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

பிலியந்தல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார். 13 ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியா பலவந்தமா்ன முறையில் இலங்கை மீது திணித்துள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அனைத்து அரசாங்கங்களும் 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை இரத்து செய்து மாற்று வழியொன்றை அறிமுகம் செய்யத்தவறியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை இரத்து செய்யும் தைரியம் எந்த அரசாங்காத்திற்கும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மாகாணமட்ட கிரிக்கெட் போட்டி

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 13, 14, 15 ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவுள்ளது. ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி வவுனியா நகரசபை மைதானத்தி லும் வைரவப் புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

பெண்களுக்கான மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப் பாணம் ஆகிய மாவட்டங்க ளில் நடைபெற்ற மாவட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளை இம்மாகாண மட்ட சுற்றுப்போட்டியில் பங்கு கொள் ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (அ-3-266)

# பெரிய வெங்காய இறக்குமதி 2015ஆம் ஆண்டில் நிறுத்தப்படும்

2015 ஆம் ஆண்டில் இலங்கை பெரிய வெங்காய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துவிடும். இதனால் வெளிநாடுகளில் இருந்து பெரிய வெங்காய இறக்குமதி நிறுத்தப்படும் என்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


பெரிய வெங்காயம், கிழங்கு, சின்னவெங்காயம் ஆகியவற்றின் உற்பத்தியில் இலங்கையை தன்னிறைவு அடையச் செய்யும் செயலணி ஒன்றை உருவாக்குவது தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட போது அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கைக்கு இரண்டு இலட்சம் மெற்றிக்தொன் பெரிய வெங்காயம் வருடாந்தம் இறக்குமதி செய்யப்படுகின்றது. இதற்காக 6 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது.

இந்தப் பயிர் வகைகளை இலங்கையில் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு ஊக்கமளித்தால் நாடு தன்னிறைவு அடையும்.

தற்போது அரிசி, சோளம் மற்றும் உழுந்து உற்பத்தியில் நாடு தன்னிறைவடைந்துள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ-2)



வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் சதுரங்கச் சுற்றுப்போட்டிகள் அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்றன. இப்போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி சார்பாக 15, 19 வயதுப்பிரிவு அணிகள் பங்கு பற்றி யிருந்தன. இதில் யாழ்.இந்து 15 வயதுப்பிரிவு சதுரங்க அணி மாகாண ரீதியில் முதலாம் இடத்தையும் 19 வயதுப் பிரிவு சதுரங்க அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. மேற்படி மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற யாழ். இந்துக் கல்லூரியின் 15 வயதுப்பிரிவு சதுரங்க அணியினரைப் படத்தில் காணலாம். (படம்: மானிப்பாய் செய்தியாளர்)

# ஐரோப்பிய நாடுகளுக்கு அமைச்சர் பீரிஸ் பயணம்

(கொழும்பு)

இலங்கையின் வெளி விவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை ஆரம்பித்துள்ளார். இதன்படி ஜேர்மனி , ஒஸ்ட்ரியா், ஸ்லோவேனியா உள்ளிட்ட நாடுகளுக்கு அவர் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நாடுகளின் வெளிவிவகார அமைச்சா்களின் அழைப்பின் அடிப்படையில் இந்த விஜயம் அமைந்துள்ளதாகவும குறித்த நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்திக் கொள்ளும்நோக்கிலேயே இந்த விஜயம் அமைந்துள்ளதெனவும் கூறப்படுகிறது.

குறித்த நர்டுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இந்தக் காலப்பகுதியில் நடைபெறவுள்ள சில முக்கிய மாநாடுகளிலும் அமைச்சர் பீரிஸ் உரையாற்றவுள்ளார். (அ-2)

# கசினோவுக்கு எதிராக போராட்டம் வெடிக்கும்

(கொழும்பு)

கொழும்பில் கசினோ எனப்படும் சூதாட்ட விடுதி அமைக்கும் நடவடிக்கைகளை கைவிடவில்லையெனில் அதற்கு எதிராக வீதியில் இறங்கிப்போராடவுள்ளதாக அஸ்கிரி விகாரையின் ஸ்ரீ புத்திக தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு சம்போடி விகாரைக்கு அண்மையில் மிகப் பிரமாண்டமான கசினோ சூதாட்ட விடுதி அமைக்கப்படவுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளதாக தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சூதாட்டவிடுதி அமைப்பதற்காக செயற்படும் எந்தவொரு அதிகாரிக்கும் எதிராக நடவடிக்கைகளையும் முன்னெடுக்க தயாராகவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ-2)

# போக்குவரத்து அமைச்சரின் வாகனங்கள் பதியப்படவில்லை

(கொழும்பு)

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் உத்தியாகபூர்வ வாகனங்கள் பதிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து அமைச்சரின் உத்தியோகபூர்வ பாவனைக்காக வழங்கப்பட்ட இரண்டு பஜிரோ ரக வாகனங்கள் இவ்வாறு பதிவு செய்யப்படவில்லை என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களமும் போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 2008 ஆம் ஆண்டு முதல் இந்த வாகனங்கள் பதிவு செய்யப்படவில்லை. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யாது வாகனங்களை பயன்படுத்துவது சட்டவிரோதமானது என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# கொழும்பு நகரில் டெங்கு தொற்று; அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

டெங்கு நோய் தொற்று தொடர்பில் கொழும்பு கோட்டை புகையிரத நிலைய அதிபர், பேருந்து நிலைய முகாமையாளர் மற்றும் நாரஹேன்பிட்டியில் உள்ள பொலிஸ் கராஜின் பணிப்பாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறித்த பகுதிகளிணாலேயே கொழும்பு நகரில் அதிக டெங்கு நுளம்புகள் பரவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மேற்கொண்ட ஆராய்வில் குறித்த விடயம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் குறித்த நிலையங்களின் அதிகாரிகளுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரிலேயே அதிக டெங்குநோய்த் தொற்று காணப்படுவதுடன் கடந்த ஐந்து மாதங்களில் 15பேர் வரையில் இந்த நோயினால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 13ஆவது திருத்த சட்டத்திற்காக ஹெல உறுமய பதவி துறக்குமா?

(கொழும்பு)

மாகாண சபை ஆட்சி முறையை இரத்துச் செய்யுமாறு கோஷமிடும் ஜாதிக ஹெல உறுமய முதலில் தமது மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களை பதவி விலகச் செய்து முன்னுதாரணத்தை காண்பிக்க வேண்டும் என மத்திய மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர் உதித் அனுருத்த தெரிவித்துள்ளார்.

வில்கமுவ பிரதேசத்தில் நடைபெற்ற மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரமன்றி அனைத்து மாகாணங்களுக்கும் வழங்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

சிலர் மாகாண சபைகள் வேண்டாம் எனக்கூறுகின்றனர். இந்த மாகாண சபைகளில் இருந்து கொண்டே அவர்கள் இதனை கூறி வருகின்றனர். அமைச்சர் விமல் வீரவன்ச இன்று துட்டகைமுனு மன்னர் போல் பேசுகிறார். மாகாண சபைகள் வேண்டாம் எனக் கூறும் அவர் கடந்த 25 வருடங்களாக எங்கிருந்தார்.

இவர் மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்ட போது போராடினார். தற்போது அமைச்சர் பதவியை பெற்றுக் கொண்டு மாகாண சபை வேண்டாம் என்கிறார். அவரது கட்சியை சேர்ந்த மத்திய மாகாண சபை விவசாய அமைச்சரவையை பதவி விலகச் செய்து விட்டு மாகாண சபைக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் எனவும் உதித் அனுருத்த தெரிவித்துள்ளார். (அ-2)

# புலனாய்வு பராமரிப்பு செயற்பாடுகள் மாவட்ட செயலகம் வரை விஸ்தரிப்பு

## அமைச்சர் செனவிரத்ன

(கொழும்பு)

பிரதேச நிர்வாகத்தை தொடர்ந்தும் சரியான பாதையில் கொண்டு செல்லும் நோக்குடன் அமைச்சின் புலனாய்வு பராமரிப்பு பிரிவை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டபிள்யூ.டீ ஜே.செனவித்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு இருந்த புலனாய்வு பராமரிப்பு செயற்பாடுகள் மாவட்ட செயலாளர் அலுவலகம் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

அதன் மூலம் மக்களுக்கு அந்தப் பிரதேச பிரிவிலும் தமது முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க இயலுமென்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளின் மாவட்ட செயலாளர் அலுவலகங்களிலும் இப்பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கு தமிழ் அதிகாரிகள் அமர்த்தப்பட்டுள்ளமையால் இப்பகுதிகளில் மக்களுக்கு பிரதேச [illegible] தொடர்பாக தமக்குள்ள [illegible] களை இலகுவாக விளக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கிடைக்கும் முறைப்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இவ்வருட காலாண்டில் மட்டும் 205 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கடந்த ஆண்டில் 118 முறைப்பாடுகளே கிடைத்தன.

தற்போது முறைப்பாடுகள் 90 வீதம் அதிகரித்துள்ளன. மக்களின் சேவைக்காகவே இவை அமைக்கப்பட்டுள்ளன [illegible] என்றும் அமைச்சர் தெரிவீத்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்குச் செல்லும் கண்ணே... உன் கண்கள் நலமா?



(கடந்த வாரத் தொடர்ச்சி...)

**கண்கள் அமைந்திருக்கும் விதம்**

கற்றல் எனும் செயற்பாடு கண்கள் உள்ளடக்கிய ஒரு குழுச் செயற்பாடாகும். கண்கள் அமைந்திருக்கும் விதத்தைப் பொறுத்தே பொதுவான கண் நலம் மேம்படுகிறது. தசைநார்கள் சரியாக அமைந்திருக்காத பட்சத்தில் மாறுகண் குறைபாடு, கண் இமைகளைத் திறக்க முடியாமை போன்ற குறைபாடுகளும் ஏற்படுகின்றது.மேலும் பார்வை அளவுகிட்டப்பார்வை ,தூரப்பார்வை போன்ற பார்வைத்திறன் குறைபாடுகளும் காணப்படுகின்றன.

**கண்கள் செயற்படும் விதம்**

நாம் பார்க்கும் பொருளிலிருந்து வரக்கூடிய ஒளிக்கதிர்கள், கண்ணின் முன்புறம் உள்ள கார்னியாவில் குவிந்து, கார்னியாவைத் தொடர்ந்து இருக்கக்கூடிய பகுதியான கருவிழியானது பார்ப்பவருக்கும் பார்க்கும் பொருளுக்கும் இடைப்பட்ட தூரத்தைப் பொறுத்து விரிந்தோ அல்லது குறுகியோ கண்ணின் வில்லை வழியாக ஒளிக் கதிர்களை கண்ணுக்குள்ளே அனுப்பி விழித்திரையில் விம்பம் சரி யான முறையில் பதிவாகும்படி செயற்பட வேண்டும். அப்போதுதான் குழந்தைகள் தன்னைவிட உயரத்தில் இருக்கும் கரும்பலகையையோ, ஆசிரியர் கரும்பலகையில் எழுதுகின்ற பாடங்களையோ அல்லது ஆசிரியரையோ பார்க்க முடியும். கண்கள் சரிவர செயற்படவில்லையென்றால்,அவை களைப்படைந்து வலி உணர்வும், பொருட்கள் இரண்டாக தெரிவது,அதன்காரணமாக பாடத்தில் கவனம் செலுத்த முடியாமல் போவது போன்ற பிரச்சினைகள் வருகின்றன.கண்களின் அசைவைக் கட்டுப்படுத்த முடியாத பட்சத்தில் குழந்தைகள் படித்துக் கொண்டிருந்த வார்த்தைகளை அல்லது வரியைத் தவற விட்டு விட்டு தேடக் கூடிய சூழ்நிலை அடிக்கடி ஏற்படுகின்றது.

**பார்வை எனும் புலன்**

நாம் பார்க்கக்கூடிய பொருளின் பிம்பம் விழித்திரையில் பதிவான பின் விழித்திரையை தொடர்ந்து இருக்கும் பார்வை நரம்பின் மூலமாக செய்திகள் மூளைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பார்வை மண்டலத்தில் நடைபெறும் மாற்றங்கள் காரணமாக பார்வை என்னும் புலனை நாம் பெறுகின்றோம்.நாம் எதனைப் பார்க்கிறோம். அதன் அடையாளம், அதன் முக்கியத்துவத்தை தீர்மானித் தல்,- அதனை ஏற்கனவே நாம் சேமித்து வைத்திருக்கும் செய்தியோடு இணைத்தல் போன்ற பல பணிகளின் ஒட்டுமொத்த உருவமே புலன் எனப்படுகிறது.

குழந்தைகளைப் பொறுத்தமட்டில் இந்நிலையில் கண்களும் கைகளும் ஒருங்கிணைந்து பார்வை எனும் புலனை அனுபவிக்கிறது. பார்வை எனும் புலன் பார்வை எனும் ஞாபகசக்தியையும் உள்ளடக்கிய தாகும்.உதாரணமாக ஏற்கனவே ,நாம் பார்த்த வார்த்தைகள் நிறம் அல்லது கண்கள் போன்றவற்றை ஏற்கனவே நினைவில் வைத்திருந்து அவற்றை மீண்டும் பார்க்கக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும் பொழுது நினைவுபடுத்திக் கொள்வது.

**கிட்டப்பார்வை(myopia)**

நாம் ஒரு பொருளை பார்க்கும் பொழுது அருகில் உள்ள பொருட்கள் நன்றாகத் தெரியும். ஆனால் தூரத்தில் உள்ள பொருட்கள் தெளிவாக தெரியாமல் போகலாம் .இதுவே கிட்டப்பார்வை எனப்படுகிறது .நாம் பார்க்கும் பொருளிலிருந்து பெறப்பட்ட ஒளிக்கதிர்கள் நமது விழித்திரையில் குவியாமல் விழித்திரைக்கு முன்பாகவே குவிகிறது. இந்நிலைக்குறைபாடே கிட்டப்பார்வை எனப்படுகிறது.

**தூரப்பார்வை (Hypermetropia)**

நாம் ஒரு பொருளை பார்க்கும் பொழுது தொலைவில் உள்ள பொருட்கள்நன்றாகத் தெரியும். ஆனால் அருகில் உள்ள பொருட்கள் தெளிவாகத் தெரியாமல் போவது தூரப்பார்வை எனப்படுகிறது.நாம் பார்க்கும் பொருளிலிருந்து பெறப்பட்ட ஒளிக்கதிர்கள் நமது விழித்திரையில் குவியாமல் விழித்திரைக்கு பின்புறம் குவிகிறது. இந்நிலைக் குறைபாடே தூரப்பார்வை எனப்படுகிறது.

**தெளிவற்ற பார்வை (Astigmatism)**

நாம் ஒரு பொருளை பார்க்கும் பொழுது பொருட்கள் யாவும் தெளிவாகத் தெரியாமல் போவது தெளிவற்ற பார்வை எனப்படுகிறது.நாம் பார்க்கும் பொருளிலிருந்து பெறப்பட்ட ஒளிக்கதிர்கள் நமது விழித் திரையில் ஓரிடத்தில் தெளிவாகக் குவியாமல் விழித்திரையின் பலபாகங்களிலும் தெறித்தாற்போல் குவிகிறது. இந்நிலையே தெளிவற்ற பார்வை எனப்படுகிறது.

**பார்வை சார்ந்த கற்றலில் குறை பாட்டுக்கான முக்கியமான அறிகுறிகள்;**

✷எவ்வளவுதூரத்திலிருந்துபொருட்களை பார்த்தாலும் கலங்கமான பார்வையை உணர்வது

✷பொருட்கள் இரண்டாகத் தெரிவது

✷கண்கள்குறுக்குவாட்டில்அமைந்திருப்பது அல்லது சாய்ந்து இருப்பது போல் அமைந்திருப்பது.

✷குறித்த நேரத்தில் கொடுக்கப்பட்ட பகுதியை எழுதாமல் தாமதிப்பது

✷படித்தவற்றை மீண்டும் நினைவுபடுத்திப் பார்ப்பதில் சிரமம்

✷சில வார்த்தைகளை விட்டு விடுவது அல்லது மீண்டும் மீண்டும் எழுதுவது

✷ மேலும் சில நேரங்களில் ஒரே மாதிரியான வார்த்தைகளால் குழப்பம் ஏற்படுவது

அடுக்குத் தொடர் போன்ற வார்த்தைகள் அல்லது ஒரே எழுத்துகள் அடிக்கடி வரும் போது குழப்பம் ஏற்படுவது.

✷ உருவங்களையும் வடிவங்களையும் வரைபடங்களையும் நினைவுபடுத்திக் கொள்வதில் சிரமம்.

✷கண்களும் கைகளும் ஒருங்கிணைந்து செயற்படுவதில் சிர மம்

✷வயதிற்கேற்ற முதிர்ச்சி இல்லாமல் செயற்படுவது

✷தலைவலி, வாந்தி , மயக்கம் கண்கள் உறுத்துதல் அல்லது எரிவது போன்று உணருதல்

✷ நிறங்களை வேறுபடுத்தி காண்பிப்பதில் சிரமம்


இவற்றுடன் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்த அறிகுறிக ளையும் கவனத்தில் கொள்வது அவசியம்

ஆக, பார்வை எனும் புலன் கற்றலின் போது வெறும் பொருளை பார்ப்பதோடு மட்டுமல்லாமல் அதனைப் பற்றி புரிந்து கொண்டு நினைவில் நிறுத்திக் கொண்டு அதனோடு தொடர்புடைய ஏனைய பொருட்களுடன் தொடர்பு படு த்தி அறிவை மேம்படுத்திக் கொள்வதும்ஆகும்.

இருப்பினும் மத்திய நரம்பு மண்டலத்தில் ஏதேனும் குறைபாடுகள் இருக்கும் பட்சத்தில் கற்றலில் குறைபாடுடைய குழந்தைகளுக்கு உளவியலாளர்கள் ,குழந்தைகள்,மனநல மருத்துவர்கள், நரம்பியல் வல்லுநர்கள் மற்றும் குழந்தைகள் நோய் நிபு ணர்களின் முறையான ஆலோசனையும் குழந்தைகள் கண் மருத் துவ நிபுணர்களின் ஆலோசனை யும் அவசியம் தேவைப் படும்.

அறிகுறிகள் தென்படும் போது அதைக் கண்டு அஞ்சாமல் முறையோடு அணுகிப்பார்த்து நோய் வருமுன் காப்பது,நோயை ஆரம்ப செய்வது இன்றைய நாளில் நம் குழந்தைகளுக்கு நாம் செய்யும் மிகப் பெரிய உதவியாகும்.

(முற்றும்)






# பல்கலைக்கழக கல்லூரிகளை நிறுவ நடவடிக்கை எடுக்கலாம்

13 பல்கலைக்கழக கல்லூரிகளை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இளைஞர் விவகார அமைச்சர் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகபெரும தெரிவித்துள்ளார்.

இந்தப்பல்கலைக்கழக கல்லூரிகளின் நிர்மாண பணிகளுக்காக 3 ஆயிரத்து 173 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பெல்வூட் அழகியற்கலை மையத்திலும் சபுகஸ்கந்த தொழில் பயிற்சி மையத்திலும் இரண்டு பல்கலைக்கழக கல்லூரிகள் நிறுவப்படும். மேலும் ஜயவர்த்தனபுர வைத் திய சாலை வளாகத்தில் சுகாதார கல்விக்கான பல்கலைக்கழக கல் லூரி நிறுவப்படும்.

அம்பாறை தொழில்நுட்ப கல்லூரியில் தேசத்திற்கு மகுட கண்காட்சிக்காக நிறுவப்பட்ட புதிய கட்டடங்களில் பல்கலைக்கழக கல்லூரி நிறுவப்படும்.

இதற்கு மேலதிகமாக 9 பல்கலைக்கழக கல்லூரிகளை இரத்மலானை, குளியாப்பிட்டிய, தலல்ல பத்தேகம, கட்டுநாயக்க, அநுராதபுரம், பொரல்ல, கட்டுப்பத்த மற்றும் யாழ்ப் பாணம் ஆகிய இடங்களில் நிறுவ அமைச்சர்நடவடிக்கைஎடுத்துள்ளார். இது தொடர்பாக அமைச்சர் டலஸ் அழக பெரும அமைச்சரவைக்கு விடுத்த வேண்டு கோளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது. (அ-2)

# வடக்கில் பனைகளுக்கு பதிலாக இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படும்

(கொழும்பு)

வடக்கு பகுதியில் பனை மரங்களுக்குப் பதிலாக இறப்பர் செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக பெருந்தோட்டத் துறை அமைச்சு அறிவித்துள்ளது.

வடக்கு பகுதியில் பனை மரங்களுக்குப் பதிலாக இறப்பர் செய்கையை மேற்கொள் ளும் நோக்கில் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் 600 ஹெக்டேயர் நிலத்தில் புதிதாக இறப்பரைப் பயிரிட இவ் வமைச்சு தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் 97 ஹெக்டெயர் நிலத்தில் இறப்பர் பயிரிடப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் 497 ஹெக்டேயர் நிலப்பரப்பில் இறப்பர் பயிரிடப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 50 குடும்பங்கள் இறப்பர் பயிர்ச் செய்கையை ஆரம்பித்துள்ளனர். இதற்குஇறப்பர் ஆராய்ச்சிநிறுவனத்தின் ஆலோசனையும் நிதியுதவியும் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சு கூறியுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நோக்கங்களைக்கொண்ட சட்டத்திருத்தங்கள் ஏற்கக்கூடியதல்ல

## பிரைடே போரம் சுட்டிக்காட்டு

13ஆவது திருத்தச் சட்டத்தை வலுவிழக்கச் செய்யும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு இடமளிக்கக்கூடாது என பிரைடே போரம் அமைப்பு கோரியுள்ளது.

எதிர்க்கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்தின் இந்த முயற்சியை முறியடிக்க முனைப்புக் காட்டவேண்டுமேன வலியுறுத்தியுள்ளது.

தற்போதைய அரசியல் சாசனத்தின் அடிப்படையில் நியாயமானதும் சுதந்திரமானதுமா்ன முறையில் வடக்கில் தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென கோரியுள்ளது.

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக அரசாங்கம் பல தடவைகள் வாக்குறுதி அளித்துள்ளதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

உத்தேச அரசியல் சாசனத் திருத்தத்தின் ஊடாக மத்திய அரசாங்கம் மாகாணசபை அதிகாரங்களை வலுவிழக்கச் செய்யமுடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரசியல் நோக்கங்களை முதனிலைப்படுத்திய சட்டதிருத்தங்களை அவசர அவசரமாக நிறைவேற்றுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என பிரைடே போரம் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னாள் இராஜதந்திரி ஜயந்த தனபால, பேராயர் துலிப் சிக்கேரா, பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு புத்திஜீவிகள் இந்த அமைப்பில் அங்கம் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஸ்ரீபூமாரி அம்மன் ஆலயத்தை வேறு இடத்துக்கு மாற்றுமாறு உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் அமைக்கப்பட்ட 80 வருட கால பழைமைவாய்ந்த ஸ்ரீபூமாரி அம்மன் கோவிலை வேறு இடத்துக்கு மாற்றுமாறு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கொள்ளுப்பிட்டி பௌத்த விகாரைக்குப் பின்பாக 1920ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு மாநகரசபையினால் குடியமர்த்தப்பட்டவர்களின் வழிபாட்டுக்காக 1930ஆம் ஆண்டில் இந்தக் கோவில் அமைக்கப்பட்டது.


மூன்று தலவிருட்சங்களைக்கொண்டு 80 ஆண்டுகளாக இயங்கும் இந்தக்கோவில் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் மிகவும் பிரபலமானது. பல இடங்களில் இருந்து பக்தர்கள் இங்கு வழிபாட்டுக்காக வருகின்றனர்.


இந்த நிலையிலேயே கொழும்பு மாநகர சபை இந்தக்கோவிலை வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடிக்கட்டுப்பாட்டில் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையே இதற்கான உத்தரவை வழங்கியுள்ளது.

இந்தக்கோவில் அமைந்துள்ள இடத்தில் கொழும்பு மாநகரசபை வாகனத் தரிப்பிடம் அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக அறியப்படுகிறது. இந்தக்கோவிலை அமைக்க வழங்கப்பட்டுள்ள மாற்று இடம் நவம்மாவத்தையில் அமைந்துள்ளது. (அ-2)







நல்லூர் றோட்டரி கழகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கிறீன் கிராஸ் ஹோட்டலில் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது. இதில் கொழும்பு கிழக்கு றோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவர் மகிலன் மங்கள விளக்கு ஏற்றுவதையும் நல்லூர் றோட்டரி கழகத்தின் அங்கீகாரச் சான்றிதழை மாவட்ட ஆளுநர் தர்சன் ஜோன் நல்லூர் றோட்டரி கழகத்தின் தலைவர் கோ. முரளிதரனிடம் கையளிப்பதையும் நிர்வாகக்குழு மற்றும் உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

# ராஜீவ்-ஜெயவர்த்தன ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதை நிறுத்துங்கள்

## மன்மோகனுக்கு கருணாநிதி கடிதம்



ராஜீவ் -ஜயவர்த்தன ஒப்பந்தத்தை அமுல்படுத்த இந்தியா நேரடியாக தலையிட வேண்டும். இந்த இக்கட்டான நேரத்தில் இந்தியா மௌனம் சாதிக்கக் கூடாது என பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தி.மு.க தலைவர் கருணாநிதி கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ராஜீவ் காந்தியும் ஜே.ஆர். ஜயவர்த்தனவும் கடந்த 1987 ஆம் ஆண்டில் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையில் 13 ஆவது சட்டப்பிரிவில் திருத்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்ய சிங்கள தீவிரவாதி குழுவான ஜாதிக ஹெல உறுமய அமைப்பு தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருவதை தங்களின் கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்.

சிங்களவர்கள்மற்றும்தமிழர்களுக்கு இடையே நல்லெண்ணம் மற்றும் நல்லுறவு ஏற்படும் வகையில் இந்த வரலாற்று சிறப்பு மிக்க ஒப்பந்தம் ஏற்பட்டது என்பதைத் தங்களுக்கு நினைவூட்டுகிறேன். அதை கைவிட சிங்களவர்கள் தீவிர வழி வகையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2002 ஆம் ஆண்டில் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி 1925 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மகேந்திரா ஒப்பந்தம் உள்ளிட்ட 14 உடன்படிக்கைகள் ஏளனம் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன். இதன் மூலம் கடந்த 1925 ஆம் ஆண்டு முதல் தமிழர்கள் அங்கு இணக்கமான சூழ்நிலையில் வாழ்வதை சிங்களவர்கள் விரும்பவில்லை என்பது வரலாற்று உண்மையாகும்.

பொய்யான வாக்குறுதிகளை அளிப்பதும் பின்னர் அதைத் திரும்பப் பெறுவதும் அனைத்து சிங்கள தலைவர்களின் எண்ணமாக உள்ளது. இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இருநாடுகளுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக இலங்கையில் 13 ஆவது அரசியல் சட்ட திருத்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் அமுல்படுத்தப்படும் என இலங்கை தமிழர்களுக்கு நாம் உறுதி அளிக்க வேண்டும்.

ஏனெனில் இதற்கு முன்பு சிங்களவர்களுடனான பல ஒப்பந்தங்கள் கைவிடப்பட்ட கசப்பான அனுபவங்களை இலங்கை தமிழர்கள் பெற்றுள்ளனர். இலங்கையில் வருகிற செப்டெம்பர் மாதம் வடக்கு மாகாண சபை தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்குள் 13 ஆவது அரசியல் சட்டதிருத்தத்தை இரத்து செய்ய வலியுறுத்தி பல்வேறு போராட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்த சிங்கள தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கிடையே பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் 13 ஆவது அரசியல் சட்டதிருத்தத்தை இரத்து செய்வதற்கான ஆவணங்களைத் தேடிவருகிறார்.

ராஜீவ்-ஜெயவர்த்தன ஒப்பந்தப்படி தமிழர்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரே சபை ஆட்சியின் கீழ் கொண்டு வரப்படும் என ஜனாதிபதி ஜெயவர்த்தன அதிகார பூர்வமான ஒப்புதலை அளித்தார். ஆனால், இந்த இணைப்புக்கு இலங்கை தேசியவாதிகள் கடுமையாக எதிர்த்தனர். ஜனதா விமுக்கி பெரமுனா என்ற சிங்கள கட்சியின் நீண்ட பிரசாரத்துக்கு பின்பு கடந்த 2006 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் திகதி இலங்கை உச்ச நீதிமன்றில் 3 மனுக்கள் தனித்தனியாகதாக்கல்செய்யப்பட்டன.

அதில் கிழக்கு மாகாணத்தை தனியாக பிரிக்கும்படி வலியுறுத்தப்பட்டது. இதற்கிடையே கடந்த 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் ஜனாதிபதி ஜயவர்த்தனவின் அதிகார பூர்வமான அறிவிப்பு நீண்ட காலம் ஆகியமையால் அதற்கு அரசியல் சட்டத்தில் வலு இல்லாமற் போய்விட்டது என கூறப்பட்டது.

எனவே, வடக்கு -கிழக்கு மாகாணம் ஏற்படாது 2007 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் 2007 ஆம் ஆண்டில் ராஜீவ் -ஜயவர்த்தன ஒப்பந்தத்தில் பின்னடைவு ஏற்பட்டது.


இந்தக் கடிதத்தின்மூலம் ராஜீவ்-ஜயவர்த்தன ஒப்பந்தத்தை அமுல்படுத்த இந்த விடயத்தில் இந்தியா நேரடியாக தலையிட வேண்டும். இந்த இக்கட்டான நேரத்தில் இந்தியா மௌனம் சாதிக்கக்கூடாது.

தமிழ் பேசும் மக்களின் விருப்பப்படி வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பது அவசியம். 13 ஆவது அரசியலமைப்பு சட்ட திருத்தப்படி அங்கு தேர்ந்தெடுக்கப்படும் சபை மூலம் பொலிஸ் உள்ளிட்ட அதிகாரம் ராஜீவ்-ஜயவர்த்தன ஒப்பந்தத்தின் கீழ் கிடைக்கும்.

எனவே தாங்கள் இந்த விடயத்தில் அவசரமாக தலையிடுவீர்கள் என நிச்சயமாக நம்புகிறேன் .மேலும் இலங்கையில் வாழும் தமிழர்களின் உரிமைகள் மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன் என கருணாநிதி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எனது கேள்விகளுக்கு சித்தர் அளித்த பதில்கள்"



ஆன்மீகம் 30


அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

அடியேன்:- சாமி! இந்த கைலாய சட்டமுனியைப் பற்றிச் சொல்லுங்கள். கேட்க ஆவலாக இருக்கிறேன்!

இது சட்டமுனிவரின் சமாதி! சீர்காழி என்ற சிவஸ்தலத்தில் உள்ளது. இங்குள்ள ஈசனை வழிபட்டவர்தான் சட்டமுனி. அதனால் இந்த சிவபெருமானுக்கு சட்டநாதர் என்று பெயர்! இதற்குத் தோணிபுரம் என்றும் ஒரு பெயர் உண்டு. முற்காலத்தில் பிரளயம் ஏற்படும் போது மன்னன் மது செய்த தோணி, வெள்ளம் வற்றியபின் இங்குதான் தரைதட்டியதாம். இவர் பல பிறவிகளில் பல அவதாரங்களை எடுத்தவர். காந்தியாக பிறந்தார்! இவர்தான் உங்களை கனவில் வந்து என்னிடம் அழைத்து வந்தவர் என்றார்.

அடியேன்:- அவரைத் தான் ஒருவன் சுட்டுவிட்டானே?

சித்தர்:- அசுரர் காலம்! அப்படித்தான் நடக்கும்! அவர் இருக்கும் போதே காங்கிரஸை கலைத்து விடுங்கள் என்றார். செய்தார்களா? மேலும் இருந்திருந்தால் அவரை மகாத்மா என்றவர்களே மதித்து இருக்கமாட்டார்கள். ஏன் என்றால் அசுரக் கூட்டம் தியாகிகளைப் புறந்தள்ளி பதவிகளை பிடித்துக் கொண்டன! மனிதனாக பிறந்தால் மனிதனாக வாழ்ந்து அனுபவித்து மரணம் அடைய வேண்டும் என்பது இயற்கை! ராமர், கிருஸ்ணர் ஆகியோர் மரணமடையவில்லையா? அதுபோல்தான் இதுவும். மகாத்மா காந்தி என்ற உடலைத்தான் அழித்தார்கள். அவர் புகழை அழிக்க முடியுமா? ஆத்மாவுக்கு அழிவில்லை! அது தெய்



வத்தின்பகுதி! பழையசட்டை கிழிந்து விட்டது! இனி புது சட்டைதானே! வரப்போகும் கொங்கணர் ஆட்சி காலத்தில் அவர் உன்னை ஆட்கொள்வார்! ராமபிரானின் ஆட்சியை கிர்ராம ஆட்சிமூலம் கொண்டுவரலாம் என்றார் காந்தி. ராமர் ஆட்சியில் நாம் பிழைக்க முடியாதே என்று நினைத்த அந்த அசுரக் கூட்டம் அவரையே அழித்துவிட்டு ஆட்டம்போட்டது. நேர்மையான தர்ம ஆட்சியைக் கொடுக்க வேண்டியவர்களே சத்ய மேவ ஜெயதே! வாய்மையே வெல்லும் என்று அவரவர் மொழியில் அச்சடித்துக்கொண்டு அச்சடித்த காகிதத்தை கரன்சி என்ற பெயரில் கொள்ளை அடித்து குவித்தார்கள்! நாடு பல போர்களை சந்தித்தது. அதனால் அழிவுகளை சம்பாதித்தது! ஆளும் வர்க்கம் வாழும் வர்க்கமாக அவர்களை ஆள அனுப்பிய மக்கள் வாழ வழியில்லாமல் மாளும்வர்க்கமாக என்று வரும் எனவும் மரணத்தை எதிர் நோக்கி காத்திருக்கலாயினர்! ஒரே நாடு என்று கூறி ஒன்று கூட்டியும் மொழி வழி மாநிலங்கள் அமைத்து வழி, வழியாக பெற்றிருந்த நீர் வழியைக்கூட தம் சுயநலத்துக்காக கர்நாடகமும் கேரளமும் அடைத்து விட்டன! பாலாற்றைப் பாலைவனமாக்கியவர்கள் தென்பெண்ணைத் தேம்பவைத்தார்கள். வைகையை வை- கை என்னும் நிலையில் ஓடையாக மாற்றிக் காட்டியவர்கள் பொன் விளைவிக்கும் பொன்னி நதியை தம் எல்லைக்குள்ளேயே மடக்கிப் போட்டு விட்டனர். இதனால் தமிழகம் மெல்ல மெல்ல பாலையாகி வளர வழிசெய்த பெருமையை அவர்கள் அடைந்துவிட்டனர்.

தொடரும்

# இந்தியாவையும் தேசியவாதிகளையும் சமாளிக்கும் அரசின் சட்ட திருத்தம்

முன்னர் கூறியதைப்போல் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முற்றாக ரத்துச்செய்வதற்காக ஹெல உறுமய இந்த திருத்த சட்டமூலத்தை கொண்டு வரவில்லை. மாறாக மாகாணசபைகளுக்குரிய சில அதிகாரங்களை ரத்துச் செய்வதனையே அது நோக்கமாகக் கொண்டது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை ரத்துச் செய்ய வேண்டும் என்பதற்கு மேலதிகமாக மாகாணங்கள் இணையும் அதிகாரத்தையும் ரத்துச் செய்து சில விடயங்களுக்கு சகல மாகாணசபைகளிடமும் அங்கீகாரம் பெறவேண்டும் என்ற நிலையும் ரத்துச் செய்ய வேண்டும் என்றே ஹெல உறுமய கேட்கிறது.

தற்போதைய தேசிய மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலையில் 13 ஆவது அரசியரமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று கேட்பது யதார்த்தம் அல்ல என ஹெல உறுமயவின் தலைவர்களில் ஒருவரும் மேல் மாகாண சபை அமைச்சருமான உதய கம்மன்பில கடந்த செவ்வாய்க் கிழமை மேல் மாகாணசபைக் கூட்டத்தின் போது கூறியிருந்தார். அதாவது இந்தியா உட்பட சர்வதேச நெருக்குவாரம் பலித்துள்ளது. அதுதான் அவர் கூறும் சர்வதேச நிலைமை என்பது புலனாகிறது.

ஆனால், சர்வதேச சமூகத்தின கோபத்திற்குள்ளாகாமல் தேசியவாதிகளோடு சேர்ந்து செயற்பட ஹெல உறுமயவின் இந்த திருத்த சட்டமூலம் அரசாங்கத்திற்கு சந்தர்ப்பத்தை கொடுத்தது. அரசாங்கம் என்ன செய்ததென்றால் ஹெல உறுமயவின் சட்ட மூலத்தில் இருந்த நான்கு காரணங்களில் இரண்டை மட்டும் எடுத்து அரசியலமைப்பை திருத்தப்போகிறது.

அதன்பிரகாரம் பொலிஸ், காணி அதிகாரங்களில் கைவைப்பதில்லை. ஆனால், இரண்டுக்கு மேற்பட்ட மாகாணங்கள் இணைந்து தனி மாகாணமாவதற்கு இருந்த வாய்ப்பு ரத்துச் செய்யப்படுகிறது. அதேவேளை சில விடயங்களுக்கு சகல மாகாண சபைகளிடமும் அங்கீகாரம் பெற்றே அரசாங்கம் அவ் விடயங்கள் தொடர்பாக சட்டம் இயற்றலாம் என்ற நிலையும் இல்லாமல் செய்யப்படுகிறது. இனி 9 மாகாணங்களில் பெரும்பாலான மாகாணங்கள் விரும்பினால் போதும்.

இதனை அனேகமாக இந்தியா எதிர்க்காது. ஏனெனில் தமிழீழத்தை அமைப்பதற்காகவே தமிழ் கட்சிகள் ஆரம்ப காலத்தில் வடக்கு- கிழக்கு மாகாண இணைப்பை கோரின. இந்தியா தமிழீழத்தை விரும்பவில்லை. அக்காலத்தில் தமிழ் ஆயுதக் குழுக்களை சமாளிப்பதற்காகவே இந்தியா அப்போது மாகாண இணைப்பை இலங்கை- இந்திய ஒப்பந்தத்தில் சேர்த்துக்கொண்டது.

அதிகார பரவலாக்கல் என்ற அர்த்தத்தில் மாகாண இணைப்பு அவசியமானதொன்றல்ல. ஏனெனில், அதிகார பரவலாக்கலின் ஒரு நோக்கம் நிர்வாகத்தை மக்களுக்கு சமீபமாக்குவதேயாகும். ஆனால், மாகாண இணைப்பானது இப்போது தமிழர்களுக்கு ஒரு கௌரவப் பிரச்சினையாக இருப்பதால் அவர்கள் அதனை தொடர்ந்து கோரி வருகிறார்கள். இந்தியாவுக்கு அதைப் பற்றி இப்போது அவ்வளவு அக்கறை இருக்கும் என்று கூற முடியாது. அது இலங்கை அரசாங்கத்திற்குத் தெரியும்.

அரசியலமைப்பில் மாகாணசபை அதிகார பட்டியல், ஒதுக்கப்பட்ட அதிகார பட்டியல் மற்றும் ஒருங்கியல் அதிகார பட்டியல் என மூன்று பட்டியல்கள் இருக்கின்றன. அவற்றில் ஒருங்கியல் பட்டியலில் உள்ள ஒரு விடயம் தொடர்பாக நாடாளுமன்றம் ஏதாவது தீர்மானம் எடுப்பதாக இருந்தால் சகல மாகாண சபைகளினதும் ஒப்புதல் அதற்காக பெறவேண்டும். அரசாங்கத்தின் புதிய திருத்தத்தின்படி இனி பெரும்பாலான மாகாணசபைகளின் ஒப்புதல் பெற்றால்போதுமானதாகும்.



அனேகமாக மத்திய அரசாங்கத்தின் பதவியில் இருக்கும் கட்சியே தெற்கில் பெரும்பாலான மாகாணசபைகளிலும் பதவியில் இருக்கும். எனவே, அரசாங்கத்தின் புதிய திருத்தத்தின்படி இனி எந்தவொரு அரசாங்கத்திற்கும் ஒருங்கியல் பட்டியலில் உள்ள எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இலகுவில் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்ற முடியும்.

சுருக்கமாக கூறின் இதன்மூலம் ஒருங்கியல் பட்டியலில் உள்ள அதிகாரங்களை அரசாங்கம் கைப்பற்றிக் கொண்டுள்ளது. பெரும்பாலான மாகாணசபைகள் விரும்பினால் அரசாங்கத்தின் மோசமான திட்டங்களை தோற்கடிக்க முடியும் என சித்தாந்த ரீதியில் வாதிட முடியுமாக இருந்த போதிலும் அது நடைமுறையாகப் போவதில்லை.

ஒருங்கியல் பட்டியலில் உள்ள ஒரு விடயம் தொடர்பாக நாடாளுமன்றம் ஏதாவது தீர்மானம் எடுப்பதற்காக சகல மாகாண சபைகளினதும் ஒப்புதல் பெறவேண்டும் என்றால் ஒரு மாகாண சபை விரும்பாவிட்டாலும் அரசாங்கத்தால் எதையும் செய்ய முடியாது. எனவே, அது ஏனைய மாகாணசபைகளுக்கு இழைக்கும் அநீதி என ஹெல உறுமய வாதாடுகிறது. அதில் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால், அதேவேளை நடைமுறையில் இனி ஒருங்கியல் பட்டியல் விடயத்தில் மாகாணசபைகளுக்கு அதிகாரமே இல்லாமல் போய்விடுகிறது.

இதனையும் இந்தியா எதிர்க்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் சித்தாந்த ரீதியில் இதில் தவறு இல்லை. சிலவேளை இதன்மூலம் தமிழ் கட்சிகள் மாகாண சபைத் தேர்தலை பகிஷ்கரிக்கச் செய்து ஆளும் கட்சி, மாகாணசபையைக் கைப்பற்றிக் கொண்டு போரின் பின்னர் தமிழ்மக்கள் தம்மோடு இருக்கிறார்கள் என்று உலகுக்கு காட்டிக்கொள்வதும் அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கலாம்.

எம்.எஸ்.எம். ஐயூப்

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

482

## யோகியின் புரட்சி



திரிதாமரும், அவருடைய சீடரும் அந்த கிராமத்தினுள் நுழைந்தபோது, அங்கு கோயில் அருகே அவர்கள் கண்ட காட்சி அவர்களை திடுக்கிடச் செய்தது. வற்றி, வறண்டு போயிருந்த ஓர் ஏழை மனிதனை மரத்தோடு, மரமாகக் கட்டி வைத்து, சாட்டையினால் அடித்துக் கொண்டிருந்தான் ஒரு முரடன். ஏழையின் மனைவி, முரடனின் கால்களைப் பிடித்து அவரை அடிக்கவேண்டாம் என்று நெஞ்சே வெடிக்கும்படி கதறினாள். அவர்களை சுற்றி கிராமத்தினர் கும்பலாகக் கூடியிருந்தனர்.

திரிதாமரின் சிஸ்யன் கௌசில்யன் விவரம் கேட்ட போது, அந்த ஏழை மனிதனின் பெயர் வீரய்யன் என்றும், அவனை சாட்டையால் அடிப்பவன் புஜங்கன் என்றும் தெரிய வந்தது. மூன்று தலைமுறைகளுக்கு முன் வீரய்யனின் முன்னோர்கள், புஜங்கனின் முன்னோர்களிடம் ஏதோ கடன் வாங்கினார்களாம். அதற்குப் பதிலாக வீரய்யனின் முன்னோர்கள் கொத்தடிமைகளாக புஜங்கனிடம் கூலியின்றி வேலை செய்து வந்தனர். ஆனால், இன்னமும் கடன் தீரவில்லை என்று சொல்லி, புஜங்கள் , வீரய்யன் குடும்பத்தை வேலை வாங்கி சக்கையாய் பிழிந்து வந்தான். வீரய்யனின் குழந்தை, குட்டிகள் கூட கொத்தடிமைகளாக புஜங்கனிடம் உழைத்தனர்.

### அம்புலிமாமா கதைகள்

வீரய்யனின் மூத்த மகன் சூர்யா சற்றே துடுக்கான பையன். மூன்று தலைமுறைகளாக தாங்கள் கொத்தடிமைகளாக வேலை செய்தும் புஜங்கன் இன்னும் கடன் பாக்கி இருப்பதாகச் சொல்லி வந்ததை அவன் நம்பவில்லை. ஒருநாள் கிராமத்தினர் அனைவர் முன்னாலும் அவன் புஜங்கனை எதிர்த்துக் கேள்வி கேட்டான்.

"என் முன்னோர்கள், உன் முன்னோர்களிடம் வாங்கிய கடன் எவ்வளவு? மூன்று தலைமுறையாக நாங்கள் செய்யும் வேலைக்கு கூலி எவ்வளவு? இப்போது இன்றைய திகதியில் இன்னும் எவ்வளவு கடன் பாக்கி? " என்று அடுக்கடுக்காக கேள்விகள் கேட்க, ஒரு கொத்தடிமை தன்னை கேள்வி கேட்பதா என்று கோபங்கொண்ட புஜங்கன், சூர்யாவை அடித்து உதைத்தான். பதிலுக்கு சூர்யாவும் அவனைப்



பழிவாங்குவதாகச் சொல்லி தலைமறைவாகிவிட்டான். அதனால், புஜங்கன் தன் ஆத்திரத்தை வீரய்யன் மீது காட்டி, சூர்யாவை தன்னிடம் ஒப்படைக்கக் கூறி, சாட்டையினால் அடித்தான்.

முற்றுந் துறந்த யோகியான திரிதாமருக்கே அதைக்கேட்டு இரத்தம் கொதித்தது. அவருடைய சிஷ்யன் அவருக்கு மேல் உணர்ச்சி வசப்பட்டு, "புஜங்கா! நீ செய்வது அக்கிரமம்! கடன் பற்றிய கணக்கு, வழக்குகளைக் காட்டு!" என்று கூச்சலிட்டான், இதனால், திடீரென அங்கிருந்த கிராமத்தினருக்கும் தைரியம் உண்டாகி, எல்லோரும் புஜங்கனை நோக்கி கூச்சலிட ஆரம்பித்தனர்.

இதற்கெல்லாம் காரணம் யோகி தான் என்று சினந்த புஜங்கன், அவரை நோக்கி "சாமியாரே! நான் கடன் பாக்கி எவ்வளவு என்று சொன்னால் தருவாயா? " என்று கேட்டான்.

"தருகிறேன்! ஆனால், கடன் பாக்கி எவ்வளவு என்று சொல்! என்று திரிதாமர் உரக்கப்பேச, புஜங்கன் சற்றுத் தடுமாறிப்போய் ஏதோ வாயில் வந்த ஒரு தொகையை குறிப்பிட்டான்.

"அதற்கான பத்திரம் உன்னிடம் இருக்கிறதா?" என்று திரிதாமர் கேட்க, ஆத்திரம் அடைந்த புஜங்கன் "அந்தக் காலத்தில் பத்திரம் எழுதிக் கடன் கொடுப்பதில்லை. கடன் கணக்குகளை நாங்கள் எழுதி வைப்பதுமில்லை. எல்லாமும் வாய்கணக்காகப் போடுவதுதான்! வீரய்யனிடம் கேளுங்கள்.! அவன் முன்னோர்கள் கடன் வாங்கியது உண்மையா?, இல்லையா? ஏன்று கேளுங்கள்!" என்று கத்தினான்.


எல்லோரும் வீரய்யனை நோக்கி, அவனோ பரிதாபகரமாக, "ஐயா! நாங்கள் ஏதோ கடன்பட்டிருக்கிறோம் என்று தெரியும். எவ்வளவு என்று என் தகப்பன், பாட்டன் சொன்னதே" இல்லை என்றான். உடனே, திரிதாமர் தன்கையிலிருந்த தங்கக் கங்கணத்தைக் கழற்றி, புஜங்கனை நோக்கி நீட்டியபடி, "இந்தா, பிடி இதை! இத்துடன் உன் கடன் தீர்ந்தது. வீரய்யன் குடும்பத்தை விடுதலை செய்!" என்று உத்தரவிட்டார்.

அதைக் கையில் வாங்கிக் கொண்டு சற்றுநேரம் உற்றுப் பார்த்தபின் "இது என் கடன் பாக்கிக்கு ஈடாகுமா என்று சந்தேகம்தான்! இதற்கு மேலும் ஏதாவது எனக்கு கொடுக்க வேண்டும்" என்றான்.

"அப்படியா!" என்ற திரிதாமர், அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து "வீரய்யன், புஜங்கனிடம் கை நீட்டி கடன் வாங்கவில்லை. அவன் முன்னோர்கள் புஜங்கனின் முன்னோர்களிடம் மூன்று தலைமுறைக்கு முன்னதாகக் கடன்பட்டனர் என்பது வெறும் வாய்வழியே வந்த செய்தியே! இதற்கு எந்த அத்தாட்சியும் இல்லை. ஆனால், வீரய்யனின் பயந்த சுபாவத்தை பயன்படுத்திக் கொண்டு, புஜங்கன் அவனை இன்னமும் மிக



வும் கொடுமைப்படுத்துகிறான். நாம் கோழையாக இருக்கும்வரை, நம்மை



மற்றவர்கள் தங்கள் கால்களின் கீழ் போட்டு மிதித்துக் கொண்டே இருப்பார்கள். நீங்களே நியாயம் சொல்லுங்கள்!" என்று சொல்ல, கூட்டம் முழுவதும் புஜங்கனுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மறுபடியும் புஜங்கன் பக்கம் நோக்கிய திரிதாமர் புஜங்கா! இது நம் நாட்டு மன்னர் எனக்கு அளித்த விலை மதிப்பற்ற பரிசு! இதை விற்றால் உன்னைப்போல் நூறு பேருக்குமேல் என்னால் கொத்தடிமைகளாக விலைக்கு வாங்க முடியும். இப்போதாவது சொல்! இதை வாங்கிக்கொண்டு நீ வீரய்யனை விடுதலை செய்வாயா?" என்று முழங்கினார்.

திடீரென புஜங்கனின் கை, கால்கள் நடுங்கின. நாவறண்டது. பயத்தில் உடல் உறைந்தது. "சுவாமி! இந்தக்கங்கணத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். வீரய்யனின் கடன் தீர்ந்துவிட்டது. என்னை விட்டுவிடுங்கள்!" என்றுகூறி விட்டு அங்கு இருந்து ஓட்டம் பிடித்தான்.

மறுநாள் மதியம், திரிதாமரும், கௌசில்யனும் ஏரிக்கரையில் ஓய்வு எடுத்துக் கொண்டு இருக்கையில், சிஸ்யன் குருவை நோக்கி, "சுவாமி! என்றோ தன் முன்னோர்கள் வாங்கிய கடனுக்கு, வீரய்யன் புஜங்கனிடம் ஏன் மூன்று தலைமுறைக்குப் பிறகும் கொத்தடிமையாக இருக்க வேண்டும்? இதை அவன் ஏன் புஜங்கனிடம் ஒருபோதும் எதிர்த்துக் கேட்கவில்லை? அவன் பிள்ளை சூர்யாவுக்கு இருந்த துணிச்சல் ஏன் வீரய்யனிடம் இல்லை?" என்று கேட்டான்.

அதற்கு திரிதாமர், ஏரிக்கரையில் ஒரு மரத்தில் சங்கிலியினால் கட்டப்பட்டிருந்த கோயில் யானையைக் காட்டினார். "கௌசில்யா! அந்த யானை முயற்சி செய்தால் ஒரு நொடியில் அந்த சங்கிலியை அறுத்து விட்டு ஓட முடியும். ஆனால், அது அப்படி செய்வதில்லை. சிறுவயதில் அது பலமுறை சங்கிலியை அறுக்க முயன்று தோல்வியடைந்திருக்கும். பிறகு அது நம்மால் முடியாதகாரியம் என்று நினைத்து விட்டு விடும். தன் வலிமையை அது உணருவதில்லை. ஏனென்றால், இது மனோதத்து வரீதியான பலவீனம். வீரய்யன் போல் மனிதர்களுக்கும் சிறு வயதில் புரட்சிக் கருத்துகள் தோன்றி இருக்கலாம். ஆனால், வயதான பின் இது முடியாதகாரியம் என்று மனதளவில் தோல்வியை ஒப்புக்கொண்டு வாழ்நாளெல்லாம் மௌனமாக துன்புறுகின்றனர். மேலும், சூர்யா போன்ற சிலர் துணிச்சலுடன் அநியாயத்தை எதிர்க்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். வீரய்யன் முதலியவர்கள் அந்த யானையைப் போன்றவர்கள்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி உரிமை பதிவு சட்டமும் சீர்திருத்தப்படவுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் காணி உரிமை பதிவு சட்டமும் சீர்திருத்தம் செய்யப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டு அரசாங்க ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள தகவலின் படி இந்தச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு ஒன்று ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக் குழு காணிப்பதிவு சட்டத்தில் ஏற்படுத்தக் கூடிய மாற்றங்கள் தொடர்பில் ஜனாதிபதியிடம் அறிவித்த தன் பின்னர் இதனை சீர்திருத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று கூறப்படுகின்றது.

இது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தனியார் காணிகள் மற்றும் பொது காணிகளையும் உள்ளடக்கியதாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவலின் படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தனியார் காணிகள் பலவற்றை உரிமை கோரப்படாத காணிகளாக அறிவித்து சிங்களவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உச்சக்கட்ட நிவாரணங்கள்

## ஜனாதிபதி உத்தரவு

நாட்டில் திடீரென ஏற்பட்ட பலத்த காற்றுடனான சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உச்சக்கட்ட நிவாரணங்களை வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகள் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் துரிதப்படுத்தப்பட்டுள்ளதுடன் தேவையான நிதி மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் நீரகவளமூலங்கள் பிரதியமைச்சர் சரத் குமார குணரட்ன தெரிவித்துள்ளார்.

காணாமற் போன மீனவர்களையும் மீனவப் படகுகளையும் தேடிக் கண்டுபிடித்து மீட்டெடுக்கும் பணிகள் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளதுடன் விமானப் படையினரும் கடற்படையினரும் மீட்புப் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட அல்லது மீட்டெடுக்கப்படும் மீனவர்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்க தமது அமைச்சு அதிகாரிகளும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அதிகாரிகளும் தயார் நிலையில் உள்ளதுடன் அவர்களுக்குத் தேவையான சிகிச்சை வழங்க மேற்படி பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் சகல மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

அனர்த்த முகாமைத்துவ பிரதியமைச்சர் தலைமையில் உடனடியாக நிவாரண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பின் பேரில் நிலைமைகளை நேரடியாக ஆராய்ந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை காலநிலை சீர்கேடு தொடர்பில் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்த போது மீன்பிடித் துறை அமைச்சு அதைக் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு எனவும் ஐ.தே.கட்சி குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# காலநிலை சீர்கேட்டு எச்சரிக்கையை அரசாங்கம் கவனத்தில் எடுக்கவில்லை

## மீன்பிடித்துறை அமைச்சே பொறுப்பேற்க வேண்டும்

அனர்த்தத்திற்கான பொறுப்பை மீன்பிடித்துறை அமைச்சு ஏற்றுக் கொள்ள வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

காலநிலை சீர்கேடு தொடர்பில் அமெரிக்க காலநிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்திருந்ததாக ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் இது தொடர்பில் அரசாங்கம் எவ்வித கவனமும் செலுத்தவில்லை. ஆபத்து தொடர்பில் மீனவர்களுக்கு தகவல்களை வழங்கியிருக்க வேண்டும். மீன்பிடித்துறை அமைச்சு இந்தத் தகவல்களை சரியான முறையில் மீனவர்களுக்கு வழங்கவில்லை.

கடும் காற்றினால் பல மீன்பிடி படகுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. 27 மீனவர்கள் பலியாகியுள்ளனர். மேலும் பல மீனவர்களைக் காணவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீன்பிடி அமைச்சின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மாகாணமட்ட போட்டியில் இரண்டாமிடம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தேராங்கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவன் பிரபாகரன் இனியவன் மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டியின் பிரிவு II இல் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார் என பாடசாலை அதிபர் ஐ.ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்படி போட்டி அண்மையில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)




❖ *1774*-அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜியேர்சில் இருந்து பிரெஞ்சு இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி யூதர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

❖ *1788* - ரஷ்ய நாடுகாண் பயணி கெராசிம் இஸ்மாயிலொவ் அலாஸ்காவை அடைந்தார்.

❖ *1805* - மிச்சிகனில் டிட்ராயிட் நகரத்தின் பெரும் பகுதி தீயில் அழிந்தது.

❖ *1837*-பொஸ்டனில் ஆங்கிலேயர்களுக்கும் ஐரிய மக்களுக்கும் இடையில் கலவரம் மூண்டது.

❖ *1901*-நியூசிலாந்து தன்னுடன் குக் தீவுகளை இணைத்துக் கொண்டது.

❖ *1935*-அமெரிக்கக் கண்டுபிடிப்பாளரான எட்வின் ஆர்ம்ஸ்ட்ரோங் உலகின் முதலாவது தனது பண்பலை ஒலிபரப்பை நியூ ஜேர்சியில் அறிமுகப்படுத்தினார்.

❖ *1937* -சோவியத் ஒன்றியத்தில் எட்டு இராணுவத் தலைவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

❖ *1938* -இரண்டாம் சீன-ஜப்பானியப் போர்: ஜப்பானியப் படைகளை எதிர்கொள்ள சீன அரசு மஞ்சள் ஆற்றை பெருக்கெடுக்க விட்டதில் 5 இலட்சம் முதல் 9 இலட்சம் வரையான பொதுமக்கள் பலியாகினர்.

❖ *1940*-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய விமானங்கள் இத்தாலியில் ஜெனோவா மற்றும் டூரின் நகர்கள் மீது குண்டுகளை வீசின.

❖ *1940*-இரண்டாம் உலகப் போர்: மால்ட்டா மீது முதற் தடவையாக இத்தாலிய விமானங்கள் தாக்குதலை நடத்தின.

❖ *1963*-தெற்கு வியட்நாமில் மத விடுதலையை வலியுறுத்தி திக் குவாங் டுக் என்ற பௌத்த மதகுரு தனக்குத் தானே தீமூட்டித் தற்கொலை செய்து கொண்டார்.

❖ *1981* - ஈரானில் 6.9 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 2ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

❖ *2002*-அன்டோனியோ மெயூச்சி என்பவரே தொலைபேசியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் என ஐக்கிய அமெரிக்கக் காங்கிரசினால் அறிவிக்கப்பட்டது.

❖ *2004* - நாசாவின் கசீனி-ஹியூஜென்ஸ் விண்ணுளவி சனிக்கோளின் ஃபீபி துணைக்கோளை அண்டிச் சென்றது.

❖ *2007*-கடும் மழை, வெள்ளம் காரணமாக வங்காளதேசத்தில் 118 பேரும் தெற்கு சீனாவில் 66 பேரும் பலியாகினர்.

### பிறப்புகள்

❖ *1838* - *எம். சி. சித்திலெப்பை, ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1898)*

❖ *1908* - சோ. இளமுருகனார், ஈழத்துப் புலவர் (இ. 1975)

❖ *1947* - லாலு பிரசாத் யாதவ் , இந்திய அரசியல்வாதி


❖ *1957* - சுகுமாரன், தமிழகக் கவிஞர்

### இறப்புகள்

❖ *1994*-அ. துரைராசா, பேராசிரியர், நாட்டுப்பற்றாளர், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பி. 1934)

❖ *1995* - பாவலரேறு பெருஞ்சித்திரனார், தமிழறிஞர் (பி. 1933)

*முகம்மது காசிம் சித்திலெப்பை*



முகம்மது காசிம் சித்திலெப்பை மரைக்காயர் 1838 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி பிறந்தார். நவீன உரைநடை இலக்கியத்தில் முன்னோடிப் படைப்பாளிகளில் முக்கியமானவர். அவரது இயற்பெயர் முகம்மது காசிம். இலங்கை முஸ்லிம்களைக் குறிப்பாகக் கல்வித் துறையில் விழிப்புணர்ச்சியடையச் செய்ய அரும்பாடுபட்ட ஈழத்து எழுத்தாளர். *மறுமலர்ச்சித் தந்தை* என அழைக்கப்படுபவர்.

பாடசாலைகளை நிறுவியும், பாடநூல்களை எழுதியும் செயலாற்றினார். ஈழத்தின் முதலாவது தமிழ் நாவலான அசன்பே சரித்திரம் என்ற நாவலை எழுதியவர்.

இவர் ஈழ இஸ்லாமியர்களின் உரிமைக்காக வாதாடும் முஸ்லிம் நேசன் என்ற இதழை நடத்தியவர். இவர் சட்ட வல்லுநரும், பத்திரிகையாளரும், கல்வியாளரும், சமூக சேவையாளரும் ஆவார். 'முஸ்லிம் நேசனை' வெளியிட்டதன் மூலம் முதல் முஸ்லிம் பத்திரிகையாளர் என்ற பெருமைக்குப் பாத்திரமான இவர் 'அசன்பே சரித்திரம்' எனும் நூலை வெளிக்கொணர்ந்ததன் மூலம் ஈழத்தின் முதல் தமிழ் நாவலாசிரியர் என்ற பெருமையையும் அடைந்தார்.

முஸ்லிம் பத்திரிகைத் துறை முன்னோடியான எம். சி. சித்திலெப்பை அவர்கள் பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.இலங்கை சட்ட நிர்ணய சபையில் முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் இருத்தல் அவசியமென்று இடையறாது வன்மையாகப் போராடினார். இதன் பயனாக 1889 ஆம் ஆண்டில் இஸ்லாமியர் இருவர் நியமன உறுப்பினராக அங்கத்துவம் பெற்றனர். இலங்கை முஸ்லிம்களின் நன்மைக்கான எந்தச் சட்டத்தையும் முழு மூச்சுடன் ஆதரித்து வந்தார்.

இவர் 1898 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபுவழிச் சமர்களுக்கு தயார்படுத்திய ஈழப்போர்-2

இந்தியப்படையினரின் வெளியேற்றத்தை அடுத்து ஒரு சில மாதங்கள் மட்டுமே வடகிழக்கில் அமைதி நிலை நீடித்தது. இந்தியப் படையினரின் வெளியேற்றத்தின் யாழ்.குடாநாட்டையும் வடக்கின் பெரும்பாலான பகுதிகளையும் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். பிறேமதாச அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் மெல்ல மெல்ல முறிந்து மீண்டும் தொடங்கியது யுத்தம்.

1990 ஜூன் 10 ஆம் திகதி மட்டக்களப்பில் தொடங்கிய மோதல் தான் ஈழப்போர்- 2 ஆக வெடித்தது. முதலாம் கட்ட ஈழப்போரிலும் இரண்டாம் கட்ட ஈழப்போரிலும் விடுதலைப்புலிகள் முழுமையாக கெரில்லாப் போரையே நடத்தினர். ஆனால், இரண்டாம் கட்ட ஈழப்போர் விடுதலைப் புலிகளை ஒரு அரை மரபுவழிப் படையாக மாற்றியது.

கிழக்கில் முற்றிலும் கெரில்லாப் போரை நடத்திய விடுதலைப்புலிகள் வடக்கில், இராணுவ முகாம்களை சுற்றிவளைத்து படையினரை முடக்கினர்.

கிழக்கில் புலிகளும் படையினரும் ஒருவரையொருவர் பதுங்கித் தாக்குவதையும் தப்பி ஓடுவதையும் வழக்கமாக்கிக்கொள்ள வடக்கிலோ அதற்கு நேர் எதிர்மாறான போர் வியூகம் அமைக்கப்பட்டது. படையினரை முகாம்களுக்குள் முடக்கி வைத்திருப்பது, அத்தகைய முகாம்களை தாக்கியழிப்பது என்று புலிகள் செயற்பட்டனர். அதே வேளை படையினரோ புதிய இடங்களைப் பிடித்து கட்டுப்பாட்டு பிரதேசத்தை விரிவாக்கவும் விடுதலைப்புலிகளின் தாக்குதலிலிருந்து தமது இருப்பை பாதுகாக்க, அவ்வப்போது முகாம்களுக்கு வெளியே வந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். விடுதலைப்புலிகள் பலமடைந்து வந்ததை உணர்ந்த படைத் தலைமை, அவர்கள் பெருமெடுப்பில் தாக்குதலை நடத்துவதைத் தவிர்ப்பதற்காக தற்காப்புக்கான தாக்குதல்களை அவ்வப்போது நடத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

இரண்டாம் கட்ட ஈழப்போர் பரந்தளவிலான சமர்கள் சண்டைகளைக் கொண்டதாகவே இருந்தது. அவ்வப்போது வழிமறிப்புச் சண்டைகளுடன் நடந்து வந்த இந்தப்போர் 1991 ஜூலையில் ஆனையிறவுத் தளம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய முற்றுகைச் சமருடன் புதிய கட்டத்துக்கு நகர்த்தப்பட்டது. அந்த முற்றுகையை உடைக்க படைத்தரப்பு மேற்கொண்ட ஒப்பரேசன் பலவேகய என்ற நீண்ட படை நடவடிக்கை இரண்டு மரபுவழி இராணுவங்களின் சமராக அதை எடைபோட வைத்தது.

அப்போது விடுதலைப்புலிகள் தம்மை ஒரு மரபுவழிப் படையைக் கொண்ட இராணுவமாக உரிமை கோரியிருந்தாலும் அது ஒரு அரைநிலை மரபுவழிப் படையாகவே செயற்பட்டது என்பதே உண்மை. ஏனென்றால் விடுதலைப்புலிகளிடம் அப்போது ஒரு மரபுவழி இராணுவத்துக்குரிய படைப்பலமோ ஆயுத வளங்களோ இருக்கவில்லை.

குறிப்பாக குறுந்தூர மோட்டார்களும் உள்ளூரில் கவசவாகனமாக மாற்றியமைக்கப்பட்ட புல்டோசர்களும் தான் அவர்களிடம் இருந்தன. ஆனால், மரபுவழி இராணுவம் ஒன்றிடம் நெடுந்தூர ஆட்லறிகளும் கவசவாகனங்களும் டாங்கிகளும் இருக்க வேண்டும். மரபுப்போர் பாணியில் விடுதலைப்புலிகள் பல சமர்களைச் செய்திருந்தாலும் இரண்டாம் கட்ட ஈழப்போரில் அவர்கள் முழுமையான மரபுப் போர்ப்பலத்தை பெறவில்லை. ஆனால், இரண்டாம் கட்ட ஈழப்போரில் விடுதலைப்புலிகளின் கடற்தாக்குதல் பலம் திடீரெனப் பெருகியமை படைத்தரப்புக்குப் பெரும் அச்சுறுத்தலான விடயமாக மாறியிருந்தது.

வடக்கில் ஆனையிறவு, சிலாவத்துறை, பூநகரிப் படைத்தளங்கள் மீது விடுதலைப்புலிகள் இந்தக் காலத்தில் நடத்திய பெரும் சமர்கள் இறுதி வெற்றியை அவர்களுக்குக் கொடுக்காதபோதிலும் கடல்வழி உதவியின்றி இனிமேல் எந்தவொரு படைத் தளங்களையும் வடக்கில் பாதுகாக்க முடியாது என்ற உண்மையை உணர்த்தியது. மரபுரீதியான தாக்குதல் உத்திகளைக் கையாண்டு விடுதலைப் புலிகள் நடத்திய இந்தச் சமர்களும் விடுதலைப்புலிகளின் தளங்களை அழிப்பதற்காக படையினர் யாழ்ப்பாணம், வன்னி, மணலாறு பிரதேசங்களில் நடத்திய தாக்குதல் நடவடிக்கைகளும் பெரும் ஆளணிச் சேதங்களை இருதரப்பிலும் ஏற்படுத்தின. இந்த பெருஞ்சமர்களின் போது இருதரப்பும் பெருமளவிலான வெடிபொருட்களைப் பயன்படுத்தின.

1990 ஜூன் 10 ஆம் திகதி தொடங்கிய இந்த இரண்டாம் கட்ட ஈழப்போர் 1994 நவம்பரில் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்து போர் தவிர்ப்பு உடன்பாடு ஒன்று செய்துகொள்ளப்படும் வரை நீடித்தது. கிட்டத்தட்ட மூன்றரை ஆண்டுகள் நீடித்த இரண்டாம் கட்ட ஈழப்போரில் இலங்கை இராணுவத்தின் தரப்பில் 140 அதிகாரிகளும் 3399 படையினருமாக மொத்தம் 3539பேர் கொல்லப்பட்டனர். மேலும் 19 அதிகாரிகளும் 586 படையினருமாக மொத்தம் 605 இராணுவத்தினர் காணாமற்போயினர். காணாமற் போனவர்களும் கொல்லப்பட்டதாகவே தற்போது கணக்கிடப்படுவதால்



ஈழப்போர் 2 இல் இலங்கை இராணுத்தின் தரப்பில் கொல்லப்பட்டவர்களின்மொத்த எண்ணிக்கை 4144 பேராகும். இந்தக் காலகட்டத்தில் 80 அதிகாரிகளும் 2449 படையினருமாக மொத்தம், 2529 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இந்த எண்ணிக்கை, போரினால் நிரந்தர காயங்களுக்கு உள்ளானவர்களாகும். குணமடைந்தவர்கள் இதில் அடங்கவில்லை.

இரண்டாம்கட்ட ஈழப் போரில் இலங்கைக் கடற்படை தரப்பில் 117 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 136 கடற்படையினர் காணாமற் போயினர். காணாமற்போனவர்களையும் சேர்த்து, கடற்படை இந்தப் போரில் 253 பேரைப் பறிகொடுத்தது. இந்தக் காலகட்டத்தில் மோசமாக காயமடைந்த 74 கடற்படையினரில் ஒரே ஒருவர் மட்டும் தொடர்ந்து சேவையாற்றக் கூடிய நிலையில் இருந்தார். ஏனைய அனைவரும் ஓய்வுபெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

கடற்புலிகளின் தாக்குதல்களால் தான் ஈழப்போர்- 2இல் கடற்படை அதிக இழப்புகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இலங்கை, விமானப்படையும் ஈழப்போர்-2 இல் சில விமானங்களை இழந்தது. அதன் காரணமாகவும் தரையில் போர் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட விமானப்படையினர் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களில் சிக்கியதாலும் ஈழப்போர்-2 விமானப்படைத் தரப்பில் 138 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 68 விமானப்படையினர் படுகாயமடைந்தனர். இரண்டாம் கட்ட ஈழப்போரில் கொல்லப்பட்ட பொலிசார் இந்தக் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை.

ஈழப்போர்- 2 இன் தொடக்கத்தில் கிழக்கில் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த 300 இற்கும் அதிகமான பொலிசார் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் பொலிசார் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பொலிசாரும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் பங்கேற்றனர். இந்த நடவடிக்கைகளின் போது ஈழப்போர்-2 இல் நூற்றுக்கணக்கான பொலிசாரும் கொல்லப்பட்டதுடன் பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். எனினும் அதுபற்றிய சரியான விபரங்கள் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை. இந்த மூன்றரை ஆண்டுகாலப் போரில் காணாமற்போனவர்களையும் சேர்த்து முப்படையினரின் தரப்பில் 4535 பேர் கொல்லப்பட்டனர். மேலும் முப்படைகளையும் சேர்ந்த 2671 பேர் இந்தப் போரில் படுகாயமடைந்தனர். இந்தப் போரில் விடுதலைப்புலிகள் தரப்பில் கொல்லப்பட்டவர்கள் பற்றிய துல்லியமான மதிப்பீடுகள் இல்லாவிட்டாலும் அவர்கள் வெளியிட்ட மாவீரர் பட்டியல் ஒன்றின்படி 1990 இல் 965 பேரும் 1991 இல் 1622 பேரும் 1992இல் 792 பேரும் 1993 இல் 928 பேரும் 1994 இல் 378 பேரும் உயிரிழந்ததாக கூறப்பட்டுள்ளது.

இதன்படி ஈழப்போர் 2இல் விடுதலைப்புலிகள் தரப்பில் 4685 பேர் மரணமாகியுள்ளனர். இது முற்றிலும் சரியான கணக்காக இருக்க வாய்ப்பில்லை. ஒரு தோராயமான கணக்குத்தான். விடுதலைப் புலிகள் தரப்பில் இந்தக்காலகட்டத்தில் காயமடைந்தவர்கள், நிரந்தரப் பாதிப்பை அடைந்தவர்கள் எத்தனை பேர் என்ற விபரமும் இல்லை. அதேவேளை படைத் தலைமையகம் வெளியிட்ட தகவல்கள் முற்றிலும் சரியானதாக இருக்கும் என்றும் கருதுவதற்கில்லை. எவ்வாறாயினும் இருதரப்பினதும் அதிகாரப் பூர்வ தகவல்களின் படி இரண்டாம்கட்ட ஈழப்போரில் கொல்லப்பட்ட படையினர் மற்றும் விடுதலைப்புலிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட சமமாகவே இருந்துள்ளதை இந்தப் புள்ளிவிபரங்கள் எடுத்துணர்த்துகின்றன.

இராணுவ ஆய்வாளர்- சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை ஒழிப்பு திட்டத்திற்கு துருக்கியின் உதவி பெறப்படும்

## துருக்கி தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் வறுமை ஒழிப்புக்கான நடவடிக்கைகளுக்கும் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சின் எதிர்காலத் திட்டங்களுக்கும் துருக்கி அரசாங்கத்தின் ஒத்துழைப்பு, உதவிகளைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இலங்கையிலுள்ள துருக்கித் தூதுவர் இஸ்கந்தர் கமால் ஒக்யாய் தெரிவித் துள்ளார்.**

உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பசீர் சேகுதாவூத்துடனான பேச்சுவார்த்தையின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

துருக்கி தூதுவரின் தலைமையிலான குழு அண்மையில் அமைச்சர் பசீர் சேகுதாவூத்தை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

இச்சந்திப்பின் போது துருக்கித் தூதுவர் இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார, சமூக மத விவகார சூழ்நிலைகள் குறித்தும் முஸ்லிம் அரசியல் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குறித்தும் ஆர்வத்துடன் கேட்டறிந்தார்.

இலங்கை- துருக்கி பாராளுமன்ற நட்புறவுச் சங்கம், இலங்கை- துருக்கி கலை, கலாசார ஒத்துழைப்பு அமைப்பு ஆகியவற்றைத் ஸ்தாபிப்பது தொடர்பாக பாராளுமன்ற சபாநாயகரூடாக தான் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் துருக்கி நிபுணர்கள் குழுவிடம் விபரித்தார்.

இதனை வரவேற்ற துருக்கித் தூதுவர், துருக்கி பாராளுமன்றத்திலும் இதனையொத்த அமைப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டதோடு இதனூடாக இரு தரப்பு பரிமாற்றங்கள், ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்த தான் ஆர்வம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது அமைச்சர் பசீர் சேகுதாவூத் தனது அமைச்சின் நடவடிக்கைகளை மேம்படுத்துவது குறித்த பரஸ்பர ஒத்துழைப்புக்கான வரைபையும் சமூக, பொருளாதார ஒத்துழைப்புக்கான கருத்திட்ட வரைபொன்றையும் துருக்கி தூதுவரிடம் கையளித்தார். (அ-2)

# பிரகீத்தின் இருப்பிடம் குறித்து தகவல்களை வெளியிடுங்கள்

## மனித உரிமை கண்காணிப்பகம் அறிவிப்பு

பிரகீத் எக்நெலிகொடவின் இருப்பிடம் பற்றிய தகவல்களை அரசாங்கம் வெளியிட வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அருந்திக்க பெர்னாண்டோ அண்மையில் எக்நெலிகொடவை தாம் பிரான்ஸில் சந்தித்ததாக குறிப்பிட்டிருந்தார்.

காணாமற் போன எக்நெலிகொட மற்றும் ஏனைய காணாமற் போனவர்கள் தொடர்பிலான பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத மற்றும் பலவந்தமான கடத்தல்கள், காணாமற் போதல்கள் தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய வலய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

26 ஆண்டு கால யுத்தத்தின் போது 5 ஆயிரத்து 671 பேர் பலவந்தமான முறையில் காணாமற் போயிருப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் புள்ளி விபரத் தகவல்கள் சுட்டிக்காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2008- 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற் போனவர்கள் பற்றிய தகவல்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# உம்ரா விசாவுக்கான கால எல்லை கட்டுப்பாடுகள் நேற்று முதல் அமுலுக்கு

(கொழும்பு)

உம்ரா விசா காலாவதியாகும் காலத்தை 14 தினங்களுக்கு மட்டுப்படுத்த சவுதி அரேபிய ஹஜ் அமைச்சு தீர்மானித்துள்ளது.

புனித மக்கா பெரிய பள்ளிவாசலில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதாலேயே இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


சவுதி நிர்வாகம் இரண்டு தினங்களுக்கு முன் வெளிநாட்டு உம்ரா முகவர்களுக்கு அனுப்பிய சுற்று நிருபத்தின்படி இந்த புதிய கட்டுப்பாடு நேற்று முதல் அமுலுக்கு வருகின்றது.

டில்லியில் இருக்கும் சவுதி தூதரகம் எமக்கு அனுப்பிய சுற்றுநிருபத்தில் ஷஹ்பான் முதலாம் திகதி முதல் உம்ரா விசா 14 தினங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என இந்தியாவின் ஐதராபாத்தில் இருக்கும் உம்ரா முகவர் நிறுவனத்தின் மொஹம்மத் அப்துல் ரஸ்ஸாக் குறிப்பிட்டார்.

ரம்ழான் காலத்தில் புனித நகரங்களான மக்கா மற்றும் மதீனா செல்ல எதிர்பார்த்திருக்கும் பல முஸ்லிம்களுக்கு சவுதி அரசின் இந்த முடிபு அதிர்ச்சி அளித்துள்ளது.

உம்ரா செல்லும் யாத்திரிகர்கள் போதுமான காலம் அங்கே தங்கியிருக்க எதிர்பார்த்தே பயண ஏற்பாடுகளை செய்கின்றனர். எனினும் எதிர்வரும் இரு மாத காலத்தில் மக்காவில் உள்ள பெரும்பாலான விடுதிகள் ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜித்தாவில் உம்ரா செயற்பாடுகளில் ஈடுபடும் பணியாளரான ரஹ்மான் அஸிஸ், இந்தப் புதிய கட்டுப்பாடு அனைத்து நாடுகளுக்கும் பொதுவானது என குறிப்பிட்டார். (அ-2)



நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலைய நூலக வார இறுதிநாள் நிகழ்வும் இருமாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும் அண்மையில் பாரதி மன்ற சனசமூக நிலைய நூலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட இருபாலை தெற்கு கிராம சேவையாளர் சி. உதயகுமார் மங்கல விளக்கேற்றி வைப்பதையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த. கலாமணி, கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி சஞ்சீவ ஜெயக்கொடி ஆகியோர் இணைந்து நாடா வெட்டி நூலகத்தை திறந்து வைப்பதையும் யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. இராசநாயகம் சிறப்புரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்




## இன்று மூன்றாம் திருவிழா

### என் தாயே...!

அலை கடலோ பாடுதம்மா
ஆதிதேவி உன் புகழே
கலைமகளாம் உன்கருணை
கரவாது வழங்கிடுக
சிலையாக அமர்ந்தாயே சிவசக்தி
மலையோடு வளர்ந்தாயே மாதேசி
தலையாலே பணிந்தோமே உன்பாதம்
தாளாது தருவாயே என் தாயே

திருமதி. ஜெயக்குமாரி கந்தவேள்,
கொக்குவில் கிழக்கு.

### நல் ஒளி ஏற்றிடுவாய்....!

நயினையின் நாயகியே
நாடிவரும் பக்தர்களுக்கு
நாகமதில் வீற்றிருந்து
அருள் மழை பொழிபவளே
வேண்டும் வரம் தருபவளே
நின் பாதம் போற்றி போற்றி
உன் பிள்ளைகள் எம் வாழ்விற்கு
நல் ஒளி ஏற்றிடுவாய் அம்மா...!

ம. நிரோஷனா,
தென் கோவையூர்.

### பாடும் பணியை அருள்பவள் நயினை நாகபூஷணி

நாடும் வரம் அருள்பவளே நயினை நாகபூஷணி
நல மருளிக் காப்பவளே நயினை நாகபூஷணி
பாடும் பணியை அருள்பவளே நயினை நாகபூஷணி
பக்தர் நலனைக் காப்பவளே நயினை நாகபூஷணி
தேடும் உரிமை தருபவளே நயினை நாகபூஷணி
தேசம் காக்கும் தெய்வமானவள் நயினை நாகபூஷணி
ஆடும் ஈசன் புறம் அமர்ந்தவள் நயினை நாகபூஷணி
அலைகடலாய் அருள் சுரப்பவள் நயினை நாகபூஷணி

மதுரகவி. காரை. எம்.பி. அருளானந்தன்.

### பக்தர்களைக் காத்திடுமம்மா

வரலாற்று உருவெடுக்க முன்
உருவாகிய நயினை நாக தேவியே!
உன்னுடைய புதுமைகளை
இன்னும் காணத் துடிக்கின்றோம்!
நாக வழிபாட்டின் சர்வலோக நாயகியே!
ஈஸ்வர வழிபாடும் உன்னுடன் இணைந்ததனால்
நாகேஸ்வரி எனப் பெயர் பெற்றாய்!
அறுபத்து நான்கு சக்தி பீடங்களின் நாயகியே.
ஆன்மாக்களை உன் வல்லமையில்
உய்த்திடுமம்மா! உன் திருவிழா காண
பொங்கு கடல் கடந்து
உனதடியைப்பற்றி நிற்கும்
பக்தர்களை காத்திடுமம்மா!

சஷ்மிதா,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவாளர் தினத்திற்கான பேச்சு, கட்டுரை போட்டிகள்

(பூந்தோட்டம்)

91 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவை முன்னிட்டு வவுனியா மாவட்ட கூட்டுறவு சபை நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா புகையிரத நிலைய வீதியில் உள்ள வவுனியா மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை பாடசாலை அதிபர் ஊடாக நாளை புதன்கிழமைக்கு முன்னதாக தலைவர் மாவட்ட கூட்டுறவுச் சபை, புகையிரத நிலைய வீதி, வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். அன்ரன் சோமராஜா அறிவித்துள்ளார். (அ-3-266)

# தற்போதய சமாதான காலம் பாரிய அபிவிருத்திகளை நோக்கி நகர்கின்றது

## அமைச்சர் றிசாத் பெருமிதம்

(பூந்தோட்டம்)

**இந்த சமாதான காலமானது பாரிய அபிவிருத்திகளை நோக்கிய தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் யுகமாக மாறியுள்ளது என வர்த்தக கைத் தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.**

வவுனியா முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கத்தினால் முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் பொருத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

மெனிக்பாமில் மக்கள் அகதிகளாக வந்த போது முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் செய்த உதவிகளையும் ஜனாதிபதித் தேர்தலின் போது அவர்கள் ஆற்றிய பணிகளையும் நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

முச்சக்கர வண்டி ஓட்டுவது கௌரவமன தொழில். அதனூடாக வவுனியா மாவட்ட மக்களுக்கு பல்வேறான உதவிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றீர்கள். எனவே, பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒரு கட்டமைப்புடன் உள்ள சங்கத்தின் ஒழுங்கமைப்பை குழப்பி சின்னாபின்னாமாக்குவதானது உங்கள் தொழிலை நீங்கள் மேற்கொள்ள முடியாததாகி விடும்.

வவுனியா மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள சகோதரர்கள் ஒரே மேடையில் அமர்ந்திருப்பதை நாம் பார்க்கின்றோம். இன்று ஜனாதிபதி சமாதானத்துடன் நிம்மதியான வாழ்வையும் ஏற்படுத்தியுள்ளார்.

எனவே, அந்த சமாதானத்தை பாதுகாப்பவர்களாக நாம் இருக்க வேண்டும்.

எனவே, இதனை குழப்புவதற்கோ அல்லது இதிலிருந்து இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்துவதற்கோ நாம் உடன்படக் கூடாது.

சிலருடைய சுயநலத்திற்காக ஓரிருவர் இலாபத்தை அடைந்து கொள்வதற்காக இந்த கட்டமைப்பை குழப்புவதற்கு துணை போக கூடாது எனவும் தெரிவித்தார். (அ-3-266)

## உழவு இயந்திரம் தடம்புரண்டதில் ஒருவர் உயிரிழப்பு

(குருமன்காடு)

வவுனியா சேமமடுகுள திருத்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் ஒரு கட்டமாக குளக்கட்டுமான வேலைகள் இடம்பெற்று வருகின்றன. குளக்கட்டுமான பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த உழவு இயந்திர சாரதி அவ் இயந்திரம் தடம்புரண்டதில் அதனுள் நசியுண்டு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு பரிதாபமான முறையில் இறந்தவர் முல்லைத்தீவு முள்ளியவளையை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 50 வயதுடைய ஆறுமுகம் சுந்தரலிங்கம் என தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இவர் தற்போது வவுனியாவில் வசித்து வருகின்ற வேளையிலே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (அ-3-250)




# கஷ்ட, அதிகஷ்ட பிரதேச கொடுப்பனவு 20ஆம் திகதி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள 61 பாடசாலைகளில் இருந்து 54 பாடசாலைகள் கஷ்டப் பிரதேசம் மற்றும் அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளாக தெரிவாகியுள்ளனவெனவும் இதன்மூலம் சுமார் 400 இற்கு மேற்பட்ட அதிபர், ஆசிரியர்கள் பயனடையவுள்ளனரெனவும் மேற்படி பிரதேசங்களில் இவர்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி சம்பளப் பணத்துடன் வழங்கப்படவுள்ளதெனவும் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 61 பாடசாலைகளில் இருந்து அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளாக 46 பாடசாலைகளும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளாக 8 பாடசாலைகளும் தெரிவாகியுள்ளன.

வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதரும் அதிபர், ஆசிரியர்கள் உட்பட இங்கு கடமையாற்றும் 400 இற்கு மேற்பட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேச ஊக்குவிப்பு படியாக ஆயிரத்து 500 ரூபாவும் அதிகஷ்ட பிரதேச ஊக்குவிப்பு படியாக 5 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவுகள் போருக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த நிலையில் இடைநிறுத்தப்பட்டு தற்போது மீண்டும் தொடரப்படவுள்ளதால் வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதரும் ஆசிரியர்கள் பெரிதும் நன்மையடையவுள்ளனரெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# வவுனியாவில் தூரமானி பொருத்தும் நடவடிக்கை



(குருமன்காடு)

வவுனியாவில் உள்ள அனைத்து முச்சக்கரவண்டிகளுக்கும் தூரமானி (மீற்றர்) பொருத்தப்படும் என வவுனியா மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சி.ரவீந்திரன் தெரிவித்தார். வவுனியாவில் உள்ள முச்சக்கரவண்டிகளுக்கு தூரமானி பொருத்தும் நடவடிக்கை யாழ்.வீதி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் இந்த வருட இறுதிக்குள் வவுனியா மாவட்டத்தில் உள்ள முச்சக்கரவண்டி ஓட்டுநர்களுக்கு நல்ல முறையிலான சீருடை வழங்கப்படும் எனவும் அவர் கூறினார். இதன்போது முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு தூரமானிகளை கைத்தொழில் முதலீட்டு அமைச்சர் றிசாத் பதியுதீன் வழங்கி வைத்தார்.

இதற்கான நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ-3-250)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 1,25,845 பேர் மீண்டும் குடியமர்வு

(முல்லைத்தீவு)

கடந்த 2009 ஆம் ஆண்டில் இருந்து இவ்வாண்டு (2013) ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை வவுனியா நலன்புரி நிலையம், நண்பர், உறவினர் வீடுகள் ஆகியவற்றில் தங்கியிருந்த 39 ஆயிரத்து 308 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 845 பேர் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ளதாக முல்லை. மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இதில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 579 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 185 பேரும்; மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 674 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 537 பேரும் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 475 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 845 பேரும், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 12 ஆயிரத்து 585 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 991 பேரும் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 11 ஆயிரத்து 659 குடும்பங்களைச் சேர்ந்த 37 ஆயிரத்து 98 பேரும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 336 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 189 பேரும் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். (அ-3-267)




சிகரம் கல்வி தொழில் வழிகாட்டி நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை கல்வியை முடித்துக் கொண்ட மற்றும் தொழில் தேடும் இளைஞர், யுவதிகளுக்கான கல்வி தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு அண்மையில் திருநகர் அழகியற் கலாமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டது. இக்கருத்தமர்வில் கருத்துப்பகிர்வு இடம்பெறுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதி பயிற்சி பாடசாலைகள் தமது பயிற்சிகளை விரிவுபடுத்த வேண்டும்

## யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி

(யாழ்ப்பாணம்)

வடக்கிலுள்ள சாரதி பயிற்சி பாடசாலைகள், நிறுவனங்கள் தம்முடைய பயிற்சி நெறிகளை விரிவுபடுத்த வேண்டும் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

யாழில் விபத்துக்கள் அதிகரிப்புக்கு சாரதி பயிற்சிகளில் காணப்படும் குறைகளும் ஒரு காரணமாக அமையலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது இடம் பெற்று வரும் அதிகரித்த வீதி விபத்துக்கள் தொடர்பில் பொலிஸ் அத்தியட்சகரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான பிரதான மற்றும் சிறு வீதிகள் தற்போது காப்பெற் இடப்பட்டுள்ளன.

காப்பெற் இடப்படாத வீதி யாழ்ப்பாணத்திற்கும் காப்பெற் இடப்பட்ட வீதி யாழ்ப்பாணத்திற்கும் நிறையவே வேறுபாடு உள்ளது.

வீதி விபத்துக்கள் யாழ்ப்பாணத்தில் காப்பெற் வீதி இடப்பட்டபின்னரே அதிகரித்து காணப்படுகின்றன.

விபத்துக்கள் பெரும்பாலும் வளைவுகள், நாற்சந்திகளிலேயே ஏற்படுகின்றன.

இவ்வாறான இடங்களில் விபத்துக்கள் இடம்பெறுவது சாரதிகளின் அறிவின்மையையே காட்டுகின்றது.

ஒரு சந்தியோ அல்லது வளைவோ வீதியில் காணப்படுகின்றபோது வாகனத்தின் வேகத்தை கட்டுப் படுத்த வேண்டியது மிக முக்கியமாகும்.

அவ்வாறு இரு பகுதி வாகன சாரதிகளும் வேகத்தை குறைத்து கொண்டால் விபத்து நிகழ்வது தவிர்க்கப்படும். அல்லது விபத்தால் ஏற்படும் பாதிப்பு குறைக்கப்படும்.

வாகன சாரதிகள் செய்யும் சிறுதவறுகள் பிறருக்கு ஈடுசெய்ய முடியாதளவிற்கு இழப்பை ஏற்படுத்திவிடும் என்பதை சாரதிகள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஒரு கணப்பொழுதில் சாரதிகள் விடும் தவறுகள் பிறருக்கு வாழ்நாள் பூராகவும் மறக்கமுடியாத துயரங்களை ஏற்படுத்தி விடும் என்பதை சாரதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

மஞ்சள் கோடு இடப்பட்ட பகுதிகள், பாடசாலை ஆரம்பிக்கும், முடிவடையும் சன நெரிசல் மிக்க இடங்களில் மெதுவாக வாகனத்தைச் செலுத்த வேண்டும் என்பது அனைவருக்கும் பொதுவாக தெரிந்த விடயங்களே. எனினும் அந்த தெரிந்த விடயங்களை கடைப்பிடிக்க தவறும் போதே விளைவுகள் விபத்தாகி விடுகின்றன.

பாடசாலை மாணவர்களை வீதியில் துவிச் சக்கரவண்டிகளில் சமாந்தரமாக செல்ல வேண்டாம் என பொலிஸார்அறிவுறுத்துகின்றனர்.

எனினும் மாணவர்கள் இதனை கருத்திற் கொள்ளாது விடுவதால்தானே உயிராபத்துக்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறான சிறு தவறுகளை திருத்திக் கொள்வதற்கு சாரதி பயிற்சி நிறுவனங்கள் முன்வரல் வேண்டும்.

அதாவது பயிற்சிகளின் போது வீதிகளில் வாகனங்களை செலுத்தி ஒலியெழுப்ப கூடாத இடங்களில் ஒலியெழுப்புகின்றனரா? மஞ்சட் கோட்டு கடவையிலும் சந்திகளிலும் வாகனத்தை வேகமாக செலுத்துகின்றனரா? வாகனம் திருப்பக்கூடாத இடங்களில் வாகனத்தை திருப்புகின்றனரா? என்பதை செயன்முறை பரீட்சைகளினூடாக அவதானித்து சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்க வேண்டும்.


சாரதிகளும் தமது பொறுப்பை உணர்ந்து செயற்படல் வேண்டும்.

தம்மால் செய்யப்படும் சிறு தவறுகள் பிறருக்கு பெரும் இழப்பினை ஏற்படுத்தி விடும் என்பதை அனைவரும் உணரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# த.தே. கூட்டமைப்பை தெரிவுக்குழுவில் பங்கேற்குமாறு இந்திய குழு வலியுறுத்தியது

## அமைச்சர் தினேஸ் தெரிவிப்பு

“இந்தியாவின் தற்போதைய நிலைப்பாட்டுக்கு ஏற்புடையதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற தெரிவுக்குழுக்கூட்டத்தொடரில் கலந்து கொள்வது அவசியம். இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய் திருந்த இந் திய ராஜ்ய சபையின் பிரதி எதிர்க் கட்சி தலைவர் ரவி சங்கர் பிரசாத் தலைமையிலான தூதுக் குழுவினர் வலியுறுத்தியுள்ளனர்.



இந்த இந்தியக் குழுவினர் நீர் விநியோக வடிகாலமைப்பு துறை அமைச்சரும் அரசாங்கத்தின் பிரதம கொறடாவுமான தினேஷ் குணவர்த்தனவை சந்தித்து உரையாடினார். இதன் போது தமிழர்கள் இலங்கை அரசியல் செயற்பாடுகளின் கலந்து கொள்வதன்மூலமும் உள்ளூரில் அரசியல் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலமும் தங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வை ஏற்படுத்துவதற்கு ஆர்வம் காட்ட வேண்டுமே தவிர எதற்கெடுத்தாலும் இந்தியாவையோ வேறொரு நாட்டையோ நம்பியிருக்கக் கூடாதென்றும் இந்தியத் தூதுக்குழுவினர் கருத்து தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்த முயற்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிடிவாத போக்கு காரணமாக சுமார் 18 மாதங்கள் காலதாமதமாகி இருக்கிறதென்றும் இனிமேலாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாரா ளு மன்ற தெரிவுக் குழுவில் கலந்து கொண்டு தங்கள் பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்த முயற்சியெடுகக் வேண்டுமென்றும் மேலும் அக்குழுவினர் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை வெளிநாடுகளுக்கு சென்று முறைப்பாடு செய்வதில் எவ்வித பயனுமில்லை. இது பிரச்சினையை நீடிப்பதற்கு இடமளிக்குமென்றும் இந்தியத் தூதுக் குழுவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு வருகை தந்தால் தாங்கள் மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்று நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணக் கூடிய வகையில் அவர்களுடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்துவோம் என்று அரசாங்கத் தலைவர்கள் இந்திய தூதுக்குவினருக்கு உறுதிமொழி அளித்திருப்பதாகவும் தெரிவித்தனர். (அ-2)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

பேருந்திலிருந்து இறங்கும்போது தடுக்கி விழுந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 4ஆம் திகதி மதியம் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம் கடந்த மாதம் 24ஆம் திகதி சாவகச்சேரி மிருசுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் சுன்னாகத்தைச் சேர்ந்த நா. மதிகரன் (வயது 30) என்ற குடும்பஸ்தரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார்.

தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் கொழும்பு தேசிய வைத்திய சாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்பு இவரது உடல் நிலை குணமடைந்து வந்ததையடுத்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்நிலையில் மேற்படி குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார். (அ-6)

# டெங்கு நோய் நடவடிக்கை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

வேகமாகப் பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக் கைகளில் முன்னேற்றம் தொடர்பாக வாரத் துக்கு ஒருமுறை அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுகாதார அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலர் டாக்டர் நிஹால் ஜயதிலகவினால் தயாரிக்கப்படும் குறித்த அறிக்கை அமைச்சர் மைத்திரிபால சிறி சேனவினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

சுகாதாரம், நகர பாதுகாப்பு, சுற்றாடல், கல்வி அமைச்சுக்கள் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் தொடர்பாக அமைச்சரவைக்கு வாராந் தம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண் ம். டெங்குடே நாயைக் கட்டுப்படுத்தவும் நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக் கவும்சகல வைத்தியச ாலைகளிலும் வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார செயலர் தெரிவித்தார். வைத்தியர்கள் தாய்லாந்தில் இந்த நோய் ஒழிப்பு தொடர்பாக பயிற்சி வழங்கவும் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (அ-2)



யாழ்.உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் கற்பித்து ஓய்வு பெற்ற திருமதி மா.அரியானந்தம் ,திருமதி தி.கணேசலிங்கம் ஆகியோரின் மணிவிழா நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட இரு ஆசிரியர்களும் அதிபர் மற்றும் ஏனைய ஆசிரியர்களுடன் நிற்பதையும் படத்தில் காணலாம். மேற்படி நிகழ்வில் மணிவிழாவை முன்னிட்டு [illegible] மலர் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

# இலங்கையில் ஊடக சுதந்திரம் தொடர்ந்தும் மீறப்படுகின்றது

இலங்கையில் தொடர்ந்தும் ஊடக சுதந்திரம் மீறப்பட்டு வருவது பற்றி தகவல்கள் கிடைத்து வருவதாக அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவைக்கு அறிவித்துள்ளது.

ஊடகவியலாளர் மீதான தாக்குதல்கள் சம்பந்தமாக வினைதிறனான விசாரணைகளை நடத்தவும் இலங்கை அரசாங்கம் தவறியுள்ளதாக ஜெனீவாவுக்கான அமெரிக்க தூதுவர் எலின் டேனஹோ மனிதவுரிமை பேரவையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனிதவுரிமை ஆர்வலர்கள், சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்களுக்கும் பலவிதமான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சி பெறும் இலங்கை இராணுவத்தை இந்தியாவிலிருந்து வெளியேற்றுங்கள்



**தமிழ்நாட்டின் வெலிங்டனில் இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி கொடுக்க மத்திய அரசு செய்துள்ள ஏற்பாடு தமிழர்களுக்கு எதிரான மத்திய காங்கிரஸ் அரசு வஞ்சமாகத் தொடர்கின்ற துரோகத்தின் சாட்சியமாகும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் நேற்றைய தினம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் விங் கொமாண்டர் பண்டார தசநாயகேவுக்கும் மேஜர் ஹரிசந்திராவுக்கும் கடந்த மே மாதம் 27 ஆம் திகதியில் இருந்து குன்னூர் வெலிங்டனில் இந்திய இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

தமிழக மக்களும் - தமிழ்நாடு அரசும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்த பின்னரும் திருட்டுத்தனமாக தமிழ்நாட்டில் இலங்கை இராணுவத்தினருக்கு மத்திய அரசு பயிற்சி கொடுப்பது மன்னிக்க முடியாத பச்சைத் துரோகம் ஆகும்.

இந்தியாவின் வேறொரு மாநில மக்களின் தொப்புள்கொடி உறவுகளை வதைக்கும் பிறநாட்டு இராணுவத்தை, இந்தியாவுக்குள் அழைத்து வந்து விருந்து வைக்கலாமா? பயிற்சியை வழங்கலாமா?

தமிழ்நாட்டை - தமிழக மக்களை கிள்ளுக் கீரையாக நினைத்தே மத்திய காங்கிரஸ் அரசு இந்த அக்கிரமத்தைச் செய்கிறது.

> “ இலங்கையில் 2009 இற்குப் பின்னரும் ஈழத் தமிழர்கள் வதைக்கப்படுவதும் தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுவதும் தமிழர் பகுதிகள் இராணுவ முகாம்களாகத் தொடர்வதும் இன்றுவரை தொடர்கதைகளாகிக் கொண்டு இருக்கின்றன.

இதில் மிக அதிர்ச்சி தருகின்ற செய்தி யாதெனில், மே 27 ஆம் திகதி தஞ்சாவூரில் இந்திய இராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோனி, இலங்கை இராணுவத்துக்கு தமிழ்நாட்டில் பயிற்சி வழங்குவது இல்லை என்று கூறினார். ஆனால், அவர் கூறிய அத்திகதியில் இருந்துதான் இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சியே தொடங்கியுள்ளது.

அப்படியானால், இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகள் அமைச்சர் அந்தோனிக்கு தெரியாமலே நடக்கின்றனவா? இந்திய இராணுவத் துறையை இலங்கை அரசே இயக்குகிறதா? இந்திய இராணுவத் தளபதிகளும் அதிகாரிகளும் ஏ.கே.அந்தோனியை முட்டாள் ஆக்குகின்றனரா? அல்லது தமிழக மக்கள் கண்களில் மண்ணைத் தூவி விடலாம் என்று கருதிக் கொண்டு அந்தோனி செயற்படுகிறாரா? தலைமை அமைச்சர் கலாநிதி மன்மோகன்சிங் இதனை எல்லாம் அறிவாரா? அறிய மாட்டாரா?

இலங்கையில் 2009 இற்குப் பின்னரும் ஈழத் தமிழர்கள் வதைக்கப்படுவதும் தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுவதும் தமிழர் பகுதிகள் இராணுவ முகாம்களாகத் தொடர்வதும் இன்றுவரை தொடர்கதைகளாகிக் கொண்டு இருக்கின்றன.

இக்கொடுமைகளை எதிர்த்து தமிழ்நாட்டின் மாணவர்கள் இலட்சக் கணக்கில் போர்க்கொடி ஏந்தி அறவழியில் கிளர்ச்சி செய்தனர். இதற்குப் பின்னரும் தமிழர்களுக்கு எதிராக இந்தியாவின் மத்திய அரசு செயற்படுவது நெருப்போடு விளையாடுகிற விபரீதமாகவே அமையும்.

எனவே, உடனடியாக இலங்கை இராணுவத்தினர் தமிழ்நாட்டில் இருந்து மட்டுமல்ல, இந்தியாவில் இருந்தே வெளியேற்றப்பட வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கும், தமிழ் இனத்துக்கும் தீங்கும் துரோகமும் செய்து வரும் மத்திய காங்கிரஸ் அரசுக்கு உரிய நேரத்தில் உரிய விதத்தில் தமிழக மக்கள் சரியான பாடம் கற்பிப்பார்கள் என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கச்சதீவு விடயம் தொடர்பில் மன்மோகன் முடிவெடுப்பார்

### அமைச்சர் நாராயணசாமி



(காரைக்கால்)

கச்சதீவு பிரச்சினை தொடர்பில் பிரதமர் மன்மோகன்சிங் சிறந்ததொரு முடிவை எடுப்பார் என மத்தியமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

காரைக்காலில் நிருபர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 1974ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் கச்சத்தீவு, இலங்கை வசம் ஒப்படைக்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் நமது மீனவர்கள் மீன் பிடிக்க செல்லும்போது வலைகளை அங்கே உலர்த்துவதற்கும் இளைப்பாறுவதற்கும் அந்த தீவில் உள்ள அந்தோனியார் கோவில் திருவிழாவில் கலந்து கொள்வதற்கும் அனுமதி அளிக்கப்பட்டது.

இந் நிலையில் கச்சத்தீவை திரும்பப்பெற வேண்டும் என்று தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இப் பிரச்சினை 2 நாடுகளுக்கு இடையேயான பிரச்சினை. எனவே, நமது மீனவர்கள் நலன் கருதி பிரதமர் நல்ல முடிவெடுப்பார் என்றார். (அ-2)

## வட, தென் கொரிய அதிகாரிகள் சுமுகமான முறையில் பேச்சு



தென்கொரியா, வடகொரியா நாடுகளுக்கிடையே அதிகாரிகள் நிலையிலான பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கடந்த இரு ஆண்டுகளில் இரு நாடுகளுக்குமிடையே நடந்த முதல் பேச்சுவார்த்தை இதுவாகும். சுமார் 45 நிமிடங்கள் நீடித்த இந்த சந்திப்பு சுமுகமாக நடைபெற்றதாகவும் முக்கியமான பிரச்சினைகள் குறித்து பேசப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. இச்சந்திப்பில் இரு நாடுகளிடையே அமைச்சர்கள் நிலையிலான பேச்சுவார்த்தையை தென் கொரியத் தலைநகர் சியோலில் நாளை புதன்கிழமை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## விடுதலைப்புலிகளாலும் தமிழர்கள் கொல்லப்பட்டனர்

### ஞானதேசிகன் சுட்டிக்காட்டு

(இராமநாதபுரம்)

விடுதலைப் புலிகளாலும் தமிழர்கள் அதிகம் பேர் கொல்லப்பட்டனர் என தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் கூறியுள்ளார்

இராமநாதபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் அவர் பேசியதாவது,

இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுகின்றனர். இப்பிரச்சினையில் நிரந்தர தீர்வு காண காங்கிரஸ் தலைவர் சோனியாவிடம் பலமுறை முறையிட்டுள்ளேன்.

இலங்கை தமிழர்களுக்கு இந்தியா சார்பில் புது படகுகள், வலை தயாரிப்பு ஆலை, 150 பேருந்துகள், 79 பாடசாலைகள், மருத்துவமனை சீரமைப்பு என பல திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தமிழர் பகுதியில் புகையிரதத் தண்டவாளம் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், 50 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை மீது பொருளாதாரத் தடை விதித்தால் தமிழர்கள் தான் பாதிக்கப்படுவர். போரில் விடுதலைப் புலிகளால் இலங்கை தமிழர்கள் அதிகம் பேர் கொல்லப்பட்டனர் என ஐ.நா.சபை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வைகோ, சீமான் ஆகியோர் இலங்கை தமிழர்களை வைத்து கட்சியை வளர்க்கின்றனர்.

கடந்த காலங்களில் தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்டால் உடனடியாக விடுவிக்கப்படுவர். ஆனால், இலங்கையில் இருந்து இந்தியா வருவோர் மீது, தாக்குதல் நடத்தப்படுவதால், தமிழக மீனவர்களுக்கு சிக்கல் ஏற்படுகிறது.

தமிழக மீனவர் பிரச்சினைக்கு காங்கிரஸ் அரசு நிந்தர தீர்வு பெற்றுத்தரும். இலங்கையில் சிறைபிடிக்கப்பட்ட 49 மீனவர்கள் விடுவிக்கப்படுவர். போதைப் பொருள் கடத்தியதாக இலங்கை சிறையில் வாடும் மீனவர்கள் விரைவில் விடுதலையாவர் என அவர் கூறினார். (அ-2)

## அமெ.மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்த இன்ரநெற் வசதி-ஒபாமா

அமெரிக்க பாடசாலை கல்லூரி மாணவர்கள் அனைவருக்கும் அதிவேக இன்ரநெற் வசதி இலவசமாக வழங்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது, உலக நாடுகளை சேர்ந்த மாணவர்களுடன் அமெரிக்க மாணவர்கள் போட்டியிட்டு சாதனை படைக்கவும் அனைத்து தகவல்களையும் உடனுக்குடன் தெரிந்து கொள்ளவும் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதன் ஒரு பகுதியாக நாட்டின் அனைத்து பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளிலும் அதிவேக இன்ரநெற் வசதி செய்து கொடுக்கப்படும், இவற்றை மாணவர்கள் இலவசமாக பயன்படுத்த வழிவகை செய்து கொடுக்கப்படும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாட்டின் 99 சதவீத மாணவர்கள் இந்த சேவையை இலவசமாக பெற முடியும். தென்கொரியா போன்ற சிறிய நாடுகள் டிஜிட்டல் தொழில் நுட்பத்தில் முன்னேறியுள்ள நிலையில், அமெரிக்காவின் செயற்பாடுகள் அதிருப்தி அளிக்கின்றன. குறுகிய காலத்தில், மாணவர்கள் உலகளாவிய அறிவை பெறுவதன் மூலம் நாட்டின் கல்வித் துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்தலாம் என அவர் கூறியுள்ளார். (அ-2)

## மத்திய ஐரோப்பிய நாடுகளில் கடும் மழை

### ஜேர்மனி, ஹங்கேரி நாடுகள் வெள்ளத்தில்

(பெர்லின்)

மத்திய ஐரோப்பிய நாடுகளில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்து வருகிறது. இதனால் ஜேர்மன், ஹங்கேரி, சுவிட்சர்லாந்து உள்ளிட்ட நாடுகள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

இந் நிலையில் கிழக்கு ஜேர்மனியில் உள்ள எல்பி ஆற்றில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை உடைந்துள்ளது. இதனால் மெக்டேபர்க் நகருக்குள் வெள்ளம் புகுந்தது. எனவே. அங்கு 24 அடி உயரத்துக்கு தண்ணீர் தேங்கி நிற்கிறது.

வழக்கத்திற்கு மாறாக 4 மடங்கு அதிகமாக தண்ணீர் மெட்டேபர்க் நகருக்குள் தேங்கியிருப்பதால் அந்த நகரம் தண்ணீரில் மூழ்கியுள்ளது. இதனால் அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் மின்சாரம், தகவல் தொடர்பு, போக்குவரத்து ஆகியவை தடைப்புட்டுள்ளன.

எனவே, அங்கிருந்த 25 ஆயிரம் பேர் வரையில் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஜேர்மனியில் மற்றொரு அணையும் பலவீனமாக உள்ளது. எனவே, அதை பலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கிடையே வெள்ளம் பாதித்த மெக்டேபர்க் நகர அதிபர் ஜோசிம் ஹவுக் நேரில் சென்று பார்வையிட்டு மீட்பு பணியை துரிதப்படுத்தியுள்ளார்.

ஜேர்மனியை தொடர்ந்து ஹங்கேரியிலும் பலத்த மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தாகப் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக புடாபஸ்ட் நகரம் தண்ணீரில் மிதக்கிறது. இதனால பலர் அங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...பயில் துவாரம் இருந்தால் அதில் பணத்தை ...நிரப்பிப் பயனில்லை.

– ஜார்ஜ் எலியட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஊழலை ஒழிக்க புலித்தோலாய் வாராய்

எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்ற நிலை மனித சமூகத்தை பேரவலத்திற்குள் தள்ளியுள்ளது. ஊழ்லிலும் பிரிவுகளைக் கொண்டு இருப்பதன் ஊடாக ஊழல் பரந்து விரிந்து வியாபகம் அடைந்து விட்டது என்பதைச் சான்றுபடுத்தும்.

இதில் இலஞ்ச ஊழல் என்பது பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் மகா சக்தியாக விஸ்வரூபம் எடுத்துள்ளது.

தமிழகத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களை தரிசிப்பதற்கு முன்னதாக இலஞ்சார்ச்சனை செய்யவேண்டி உள்ளது.

செய்த வினைப்பயனை வேரறுத்து ஆன்மா ஈடேற்றம் பெற வழி அமைத்துக் கொடுக்கும் ஆலயங்களில் கூட, லஞ்சம் தாண்டவம் ஆடுகின்றது என்றால், சாதாரண வாழ்க்கை நடைமுறையில் லஞ்சம் பெற்றிருக்கக் கூடிய பெருவாழ்வை சொல்லித்தான் தெரியவேண்டும் என்றில்லை.

இப்போது கிரிக்கெட் விளையாட்டிலும் லஞ்ச ஊழல் புகுந்து அந்த விளையாட்டின் இரசனையை அழித்து சேதப்படுத்தி விட்டது.

விளையாட்டு மைதானத்தில் யார் விக்கெட் வீழ்த்தினாலும், சிக்சர் அடித்தாலும் பணம் பந்திலும் பாய்ந்திருக்குமோ என்று ரசிகர்கள் நினைக்கவே செய்வர்.

விளையாட்டில் மக்கள் காட்டும் ஆர்வம் என்பதன் அடிப்படை திறமையாகும்.

ஒரு விளையாட்டு வீரன் மைதானத்தில் நின்று தனது திறமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் போது மக்கள் கரகோசம் செய்து ஆர்ப்பரிப்பர்.

அந்த ஆர்ப்பரிப்பு விளையாட்டு வீரனுக்கு ஆத்ம பலத்தை– ஆத்ம திருப்தியை கொடுக்கின்றது.

ஆக ரசிகன்– விளையாட்டு வீரன் என்ற இருதரப்பு உறவு என்பது உண்மையான– அப்பளுக்கற்ற பற்றுதலினால் ஏற்படுவது ஆகும்.

அந்த பற்றுதல் தெய்வீகமானது. அந்தத் தெய்வீகத்திற்கே விலைபேசி விட்ட பின்பு விளையாட்டுத் தரக்கூடிய ஆத்ம திருப்தி என்பது பழுதறாதது என்று சொல்ல முடியாது.

எங்கும் ஊழல் என்பதால் ஏற்படக்கூடிய வேதனை என்பதற்கு அப்பால் ஊழலை அழிக்க வல்லார் யார் ? என்பதே இப்போது இருக்கக் கூடிய ஏக்கமும், பதைபதைப்பும் ஆகும்.

நாம் இங்கு சுட்டிக்காட்டிய ஊழல் என்பது அண்டை நாட்டில் நடந்தது என்பதற்காக நம்நாட்டில் ஊழல் இல்லை என்று யாரும் நினைத்தால் அது மிகப்பெரும் அபத்தம்.

இங்கும் எங்கும் ஊழல். ஆகவே ஊழல் என்ற பெரும் நோயைத் தீர்ப்பது தொடர்பில் ஆக்கபூர்வமான சிந்தனைகள் நிறையவே தேவை.

அந்தச் சிந்தனைகள் பாடப்புத்தகங்களில் இடம் பெறுதல் சாலப்பொருத்துடையது ஆகும்.

# ஹெல உறுமயவின் பிரேரணையை ஆதரிக்கப்போவதில்லை- ஜே.வி.பி

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13-வது திருத்தச் சட்டத்திற்கு எதிராக ஜாதிக ஹெல உறுமயவினால் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ள தனிநபர் பிரேரணையானது பௌத்த இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே இதற்கு ஜே.வி.பி. ஆதரவளிக்கமாட்டாது. மாறாக தேசியளவில் புதிய அரசியல் அமைப்பொன்றுக்கான தேவை காணப்படுவதாக அக்கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

அனைத்து இன மக்களுக்கும் சமத்துவம், சுதந்திரம் மற்றும் சகோதரத்துவம் என்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டே புதிய அரசியல் அமைப்பு நிறுவப்படவேண்டும்.

அவ்வாறில்லாது தற்போதுள்ள அரசியலமைப்பில் சிறுசிறு திருத்தங்களை ஏற்படுத்தி நாட்டில் இனவாதத்தை தூண்டிவிட்டு அரசியல் நோக்கங்களுக்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் சோமவன்ச குறிப்பிட்டார்.

ஜாதிக ஹெல உறுமய 13-வது திருத்தச்சட்டத்துக்கு எதிராக தனிநபர் பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்வைத்து அதற்கு ஆதரவு அளிக்குமாறு வலியுறுத்தி அனைத்து கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றது.

ஆனால் இப்பிரேரணையில் நியாயமான நோக்கங்கள் எதுவும் இல்லை. மாறாக இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட உள்நோக்கங்களே காணப்படுகின்றன. மாகாணசபை முறைமை மாற்றம் அடையவேண்டுமென்று ஜே.வி.பி. வலியுறுத்துவது இனவாதத்தை அடிப்படையாகக்கொண்ட கொள்கைகளால் அல்ல. அனைத்து இன மக்களுக்கும் சமத்துவமான சந்தர்ப்பங்கள், சமாதானம் மற்றும் சகோதரத்துவம் என்பவை உரிய வகையில் கிடைக்கவேண்டும் என்பதாலேயே. அப்போதுதான் அனைத்து இன மக்களுக்கும் பொருளாதார மற்றும் அரசியல் சமத்துவம் கிடைக்கும். இல்லையென்றால் இன முரண்பாடுகளே தோன்றும்.

தற்போது காணப்படுகின்ற மாகாண சபை முறைமையானது ஏற்றுக் கொள்ளும் விதத்திலோ அனைத்து இன மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலோ அமையவில்லை. எனவே இம்முறைமையை முற்றாக இல்லாதொழிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜே.வி.பி. தொடர்ந்தும் உள்ளது.

13-வது திருத்தச்சட்டத்தை பொறுத்த வரையில் தற்போதைய சூழ்நிலை உண்மையான தன்மையை கடந்து சென்றுள்ளது. எனவே இதனை மாத்திரம் திருத்தத்திற்கு உட்படுத்துவதால் எவ்விதமான பலனும் ஏற்படப்போவதில்லை.

ஆளும் தரப்பினரால் 13-வது திருத்தச்சட்டத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளானது வெறும் அரசியல் மற்றும் குறுகிய நோக்கங்களையே கொண்டுள்ளது எனக் கூறினார். (அ-2)

## மனநல பரிசோதனைக்கு நீதவான் உத்தரவு

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோஹண விஜயவீரவின் மூத்த மகளை மனநல பரிசோதனைக்கு உட்படுத்துமாறு வத்தளை நீதவான் நீதி மன்ற நீதவான் நேற்று உத்தரவிட் டுள்ளார்.

கடந்த 20-ம் திகதி தனது தாய் மற்றும் சகோதரனை தாக்கியதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ரோஹண விஜயவீரவின் மூத்த மகளான தசுனி ரிஷாவை மனநல பரிசோதனைக்கு உட்படுத்தி முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (எ-11)

## கூமாங்குள வீதியை புனரமைத்து தாருங்கள்

(குருமன்காடு)

வவுனியா கூமாங்குள வீதியை திருத்தி தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பிரதேச தலைவர், பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலரிடம் வேண்டுகோள் விடுத்தபோதும் இதுவரை வீதி திருத்தப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதிகள் குன்றும் குழியுமாக இருப்பதனால் வீதியால் பயணிக்கும் பாதசாரிகள் தாம் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர். மேலும் பாடசாலைசெல்லும்மாணவர்கள், நோயாளர், தொழில்புரிவோர் எனபலரும்பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதுபற்றி பிரதேச சபை தலைவரிடம் கேட்டபோது தமது பிரதேச சபைக்கு உட்பட்ட பல வீதிகள் திருத்தி முடிக்கப் பட்டுள்ளன எனவும் அடுத்த கட்டமாக திருத்தப்படாத வீதிகள் திருத்தப்படும் எனவும் கூறினார். (அ-3-250)

## நிர்மாண வேலைகள் 20 மாதங்களில் நிறைவு

(கொழும்பு)

தாமரைக் கோபுரம், மஹிந்த ராஜபக்ஷ அரசாங்க அலுவலக தொகுதி தகவல் தொலைத் தொடர்புக் கோபுரம் ஆகியவற்றின் நிர்மாண வேலைகளை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது இலங்கையின் பாரிய அபிவிருத்தியின்மைல்கல்லாக அமையுமெனவும் உத்தேச தாமரைக் கோபுர கட்டடத் தொகுதி கொழும்பு விஜேவர்த்தன மாவத்தையில் இது நிர்மாணிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் நிலத்துக்கடியிலான நிர்மாணப் பணிகளுக்கு 104.3 அமெரிக்க டொலர் மில்லியன் ரூபா செலவிடப்படும் என தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட தெரிவித்தார். (அ-2)

## முதியோர்களுக்கான இலவச மருத்துவமுகாம்

பருத்தித்துறை ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் நடத்தப்படும் முதியோர்களுக்கான இலவச மருத்துவமுகாம் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3 மணிவரை பருத்தித்துறை ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களை இனங்கண்டு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு மாதமும் 2 ஆவது வெள்ளிக்கிழமைகளில் இந்த இலவச மருத்துவ முகாம் மாலை வேளைகளில் பருத்தித்துறை சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-19)

## வயோதிபர் கைது

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதிய வளத்தாப்பட்டி பிரதேசத்தில் 6 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 60 வயது வயோதிபர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை புதிய வளத்தாப்பட்டி சுனாமி வீட்டுத் திட்டப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இவ் வயோதிபரினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளான குறித்த சிறுமி சம்மாந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த இவர்கள் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சம்மாந்துறைபிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி வீட்டுத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேற்படி சிறுமியின் பெற்றோர் வீட்டில் இல்லாத நேரத்தில் இச்சிறுமியை அழைத்த வயோதிபர் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

பின்னர் பெற்றோர் சம்பவத்தினை அறிந்ததும் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டிற்கு அமைய வயோதிபர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### இலட்சியத்தை மாற்றாதீர்!



✦ இந்த உலகம் இறைவனுக்குச் சொந்தமானது. உலகப் பொருட்களில் எல்லாம் அவரே இருக்கிறார். இந்தக்கோணத்தில் பார்க்கத் தொடங்கிவிட்டால் நம் மனம் உயர்வு பெறும்.

✦ ஒரு இலட்சியத்தை ஏற்றுக்கொண்டபின் அதைவிடப் புதுமையான ஒன்றைக் கண்டதும் பழையதைப் புறக்கணிப்பது அல்லது விட்டுவிடுவது உங்கள் ஆற்றலைச் சிதறடித்து விடும்.

✦ இங்கொன்றும் அங்கொன்றுமாக நுனிப்புல் மேய்பவர்கள் ஒருபோதும் வெற்றிபெறமுடியாது. கணநேரம் இன்பமாக ஏதோ கிடைக்கலாம். ஆனால் அத்துடன் எல்லாம் முடிந்து விடும்.

✦ ஆன்மீகத்தைப் புறக்கணித்துவிட்டு மேலைநாட்டு நாகரிகத்தை நோக்கிச் செல்லத் தொடங்கினால் மூன்றே தலைமுறைகளில் நம் பண்பாடு அழிந்துவிடும்.

✦ ஒரு இலட்சியத்தை எடுத்துக்கொண்டு அதைப்பற்றியே கனவு காணுங்கள். அதைச்சுற்றியே உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அடியையும் எடுத்து வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. அணிக்கு அபராதம்

சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் பந்துவீச கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டதற்காக அவுஸ்திரேலிய அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி போட்டி ஊதியத்தில் அணித் தலைவர் ஜார்ஜ் பெய்லிக்கு 20 சதவீதமும், ஏனைய வீரர்களுக்கு 10 சதவீத மும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. லண்டன் ஓவலில் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியாவை 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற் கடித்தது இங்கிலாந்து. இந்த ஆட்டத்தில் முதலில் பந்துவீசிய அவுஸ்திரேலிய அணி, பந்துவீசுவதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் ஒரு ஓவர் குறைவாக வீசியிருந்தது.

இதையடுத்து அந்த அணிக்கு போட்டி நடுவர் ஜவஹல் ஸ்ரீநாத் அபராதம் விதித்துள்ளார் என்று ஐசிசி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேற்கிந்தியத் தீவு விக்கெட் காப்பாளர் மீது குற்றச்சாட்டு

கிரிக்கெட் போட்டியின் உத்வேகத்தை சீர் குலைக்கும் வகையில் செயற்பட்டதாக மேற் கிந்தியத் தீவுகள் விக்கெட் காப்பாளர் தினேஷ ராம்தின் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால் அதை அவர் மறுத்துள்ளளார்.

சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் போட்டியில் லண்டன் ஓவலில் நடைபெற்ற ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளும், பாகிஸ்தானும் மோதின. இதில் பாகிஸ்தான் துடுப்பெடுத் தாடியபோது, 9 ஆவது ஓவரை கெமர் ரோச் வீசினார்.

அந்த ஓவரில் பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் அடித்த பந்தை, தினேஷ் ராம்தின் பிடியெடுத்தபோது நடுவர் ஆட்டமிழப்பு கொடுத்தார். ஆனால் ரி.வி. ரீபிளேயில் மிஸ்பா கொடுத்த பிடியெடுப்பு, ராம்தின் கையில் இருந்து நழுவி கீழே விழுந்தது தெரிய வந்தது. இதையடுத்து மிஸ்பா உல் ஹக்கை மீண்டும் அழைத்து விளையாட வைத்தனர்.

மிஸ்பாவுக்கு ஆட்டமிழப்பு கொடுத்த போது, பிடியெடுப்பை கோட்டைவிட்டது குறித்து நடுவரிடம் தெரிவிக்காமல், சகவீரர்களுடன் சேர்ந்து மிஸ்பா ஆட்டமி ழப்பை கொண்டாடினார் ராம்தின். இதனால் போட்டியின் உத்வேகத்தை சீர்குலைக்கும் வகையில் ராம்தின் செயற்பட்டதாக கள நடு வர் உள்ளிட்ட 4 நடுவர்களும், ஐசிசி போட் டிக் குழுவிடம் புகார் தெரிவித்தனர்.

ஆனால் ராம்தின், நடுவர்களின் புகாரை மறுத்ததால் அது தொடர்பாக விசாரணை நடைபெறவுள்ளது. அதில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் ராம்தினுக்கு போட்டி ஊதியத்தில் 50 முதல் 100 சதவீதம் வரை அபராதமாக விதிக்கப்படலாம் அல்லது இரு ஒருநாள் போட்டிகளில் விளையாட தடை வீதிக்கப்படலாம். மிஸ்பாவுக்கு தவ றான ஆட்டமிழப்பு கொடுக்கப்பட்டபோது, 'அவர் ஓட்டக் கணக்கையே தொடங்கவில்லை. எனினும் டி.வி. ரீபிளேயின் மூலம மறுவாழவு பெற்ற மிஸ்பா ஆட்டமிழக்காமல் 96 ஓட் டங்களைக் குவித்தது குறிப்பிடத்தக்கது.

# துடுப்பாட்டம் சறுக்கியது



## – இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ்

நியூசிலாந்திற்கெதிரான போட்டியில் தோல்வியடைந்தமைக்கு இலங்கையின் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகச் செயற்படா மையே காரணம் என இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள் ளார். அத்தோடு இலங்கையின் துடுப்பாட்டம் இன்னும் சிறப்பாகச் செயற்பட வேண்டுெ மனவும் அவர் தெரிவித்தார்.

நியூசிலாந்திற்கெதிரான போட்டியில் இலங்கை அணி 138 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்து மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது.

இலங்கையின் பந்துவீச்சாளர்கள் மிகச்சிறப்பாகச் செயற்பட்டு நியூசிலாந்திள் 9 விக்கெட்டுக்களைப் பெற்ற போதிலும், இலங்கையின் தோல்வியைத் தவிர்க்க முடிந்திருக்கவில்லை.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அஞ்சலோ மத்தியூஸ், தேவையான ஓட்டங் களை விட 30, 40 ஓட்டங்கள் குறைவாகப் பெற்றிருந்ததாகக் குறிப்பிட்டார். நேற்றைய ஆடுகளம் 200, 250 ஓட்டங்களைப் பெறக்கூடிய ஆடுகளமல்ல எனக் குறிப்பிட்ட அவர், துடுப்பாட்ட வீரர்கள் ஆடுகளத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதாகத் தெரி வித்தார்.

பந்துவீச்சாளர்களுக்கு இவ்வாடுகளம் சிறிது உதவிகளை வழங்கியிருந்த போதி லும், துடுப்பாட்ட வீரர்கள் இலங்கையை கைவிட்டு விட்டதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் மிகச்சிறப்பாகச் செயற்பட்ட லசித் மலிங்கவிற்கு புகழாரம் சூட்டிய அஞ்சலோ மத்தியூஸ், அவர் மீது தனக்கு அதிக பட்ச நம்பிக்கை இருப்பதாகவும், குறிப்பிட்டார்.

## நட்பு காற்பந்து போட்டியில் பிரேசில் வாகை சூடியது

பிரான்ஸ் அணிக்கு எதிரான நட்பு காற் பந்து போட்டியில் பிரேசில் அணி வெற்றி பெற்றது. பிரேசிலில் உள்ள போர்டோ அல்கி ரியில் நடைபெற்ற போட்டியின் முதல் பாதி யில் இரு அணி வீரர்களும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

பின் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட பிரேசில் அணிக்கு ஆஸ்கார் (54 ஆவது நிமிடம்), ஹெர்நானஸ் (85), லூகாஸ் (90,3) ஆகியோர் கோல் அடித்து அணியின் வெற் றியை உறுதிசெய்தனர். பிரான்ஸ் அணி வீரர களின் கோல் முயற்சி எதுவும் கை கொடுக்க வில்லை. ஆட்டநேர முடிவில், பிரேசில் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## ஹிந்திப் பாடலால் சர்ச்சை

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் இலங்கை அறிமுகப்படுத்தப்பட்டபோது ஹிந்தி மொழிப் பாடலொன்று பின்னணியில் ஒலிபரப்பப்பட்டமைக்கு சர்வதேச கிரிக்கெட் சபை தனது வருத்தங்களை வெளியிட்டுள் ளது. இலங்கை கிரிக்கெட் சபையிடமே சர்வதேச கிரிக்கெட் சபை இந்த வருத் தத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஜூன் 6ஆம் திகதி ஆரம்பித்த சம்பியன்ஸ கிண்ணப் போட்டிகளில் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றபோது ஒவ்வொரு அணியும் தேசி யக் கொடிகளுடன் அறிமுகம் செய்து வைக் கப்பட்டிருந்தத். இதில் இலங்கை அணி அறிமுகப்படுத் தப்பட்டபோது, பின்னணியில் ஹிந்திப் பாடலொன்று ஒலிபரப்பப்பட்டிருந் தது. இது சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

**சம்பியன்ஸ் கிண்ணம்**

**இன்றைய ஆட்டம்**

இந்தியா

Vs

மேற்கிந்தியத் தீவுகள்

## பிரெஞ்சு பகிரங்க டெனிஸ்; 8 ஆவது முறை நடால் சம்பியன்



பிரெஞ்சுப் பகிரங்க டெனிஸ் போட்டியில் ஸ்பெயினின் ரஃபேல் நடால் 8ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் ஞாயிற் றுக்கிழமை நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் இறுதிச்சுற்றில் நடால் 6-3, 6-2, 6-3 என்ற நேர் செட்களில் சகநாட்ட வரான டேவிட் ஃ பெரரை வீழ்த்தினார். இந்த ஆட்டம் 2 மணி நேரம், 16 நிமிடங்கள் நடைபெற்றது.

இதன்மூலம் டெனிஸ் வரலாற்றில் ஒரே கிராண்ட்ஸ்லாம் போட்டியில் (பிரெஞ்சு) அதிகமுறை பட்டம் வென்றவர் என்ற உலக சாதனையை படைத்தார் 27 வயதான நடால்.

இதன்மூலம் ஒட்டுமொத்தமாக 12ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றி யுள்ள நடால், அதிக கிராண்ட்ஸ்லாம் பட் டங்கள் வென்றவர்கள் வரிசையில் சுவிட் சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர் (17), அமெ ரிக்காவின் பீட் சாம்ப்ராஸ் (14) ஆகியோ ருக்கு அடுத்தபடியாக 3ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

பிரான்ஸ் பகிரங்க டெனிஸில் இதுவரை 60 ஆட்டங்களில் விளையாடியுள்ள நடால், ஒன்றில் மட்டும் தோற்றுள்ளார். டேவிட் ஃ பெரருடன் இதுவரை 24 ஆட்டங்களில் மோதியுள்ள நடால், 20இல் வெற்றி கண் டுள்ளார். தற்போது தொடர்ச்சியாக 9 முறை ஃபெரரை வீழ்த்தியுள்ளார் நடால்.

அதேநேரத்தில் டேவிட் ஃபெரர் தனது 31ஆவது வயதில்தான் முதல்முறையாக கிராண்ட்ஸ்லாம் போட்டியின் இறுதிச்சுற்றில் விளையாடியுள்ளார்.

முழங்காலில் ஏற்பட்ட காயம் காரண மாக கடந்த ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக். மற்றும் அமெரிக்க டெனிஸ், அவுஸ்தி ரேலிய டெனிஸ் ஆகிய போட்டிகளில் விளை யாடும் வாய்ப்பை இழந்த நடால், 7 மாத ஓய்வுக்குப் பின்பு கடந்த பெப்ரவரியில் மீண் டும் டெனிசுக்கு திரும்பினார். அதன்பின்பு 9 டெனிஸ் தொடர்களில் விளையாடிய நடால், 7இல் பட்டம் வென்றுள்ளார்.

### பரிசளித்த உசேன் போல்ட்

சம்பியன் பட்டம் வென்ற நடாலுக்கு, உல கின் அதிவேக ஓட்டப் பந்தய வீரரும், ஒலிம் பிக் சம்பியனுமான ஜமைக்காவின் உசேன், போல்ட் கிண்ணத்தை வழங்கினார்.

### தீப்பந்தத்துடன் களத்தில்

இறுதி ஆட்டத்தில் 2ஆவது செட் நடை பெற்றுக் கொண்டிருந்தபோது, மைதானத் தின் மேற்பகுதி இருக்கையில் இருந்த முக மூடி அணிந்த ஒரு கும்பல், அரை நிர்வாணத் தோடும், கையில் தீப்பந்தங்களுடனும் ஆடு களத்தின் அருகில் வந்தது.

அப்போது அந்த கும்பலைச் சேர்ந்த ஒரு வர் தீப்பந்தத்துடன் களத்தில் குதித்து நடா லின் அருகில் சென்றார். அதற்குள் அங்கி ருந்த பாதுகாவலர்கள் விரைந்து வந்து முக மூடி அணிந்தவரைப் பிடித்து வெளியேற்றினர்.

பிரான்ஸில் ஓரினச் சேர்க்கை திருமணத துக்கு கடந்த மாதம் சட்ட அங்கீகாரம் வழங் கப்பட்டது. அதற்கு ஒரு கும்பல் எதிர்ப்புத் தெரி வித்து வருகிறது. அந்த கும்பலைச் சேர்ந்த வர்களே தீப்பந்தத்துடன் வந்துள்ளனர்.

### பிரையன் சகோதரர்கள்

ஆடவர் இரட்டையர் பிரிவில் அமெரிக் காவின் மைக் பிரையன்-பாப் பிரையன் சகோதரர்கள் சம்பியன் பட்டம் வென்றனர்.

சனிக்கிழமை இரவு நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் பிரையன் சகோதரர்கள் ஜோடி 6-4, 4-6, 7-6 (4) என்ற செட் கணக்கில் பிரான்ஸின் மைக்கேல் லோட்ரா-நிகோலஸ் மஹுத் ஜோடியை வீழ்த்தியது.

பிரையன் சகோதரர்களுக்கு இது 14 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் ஆகும். பிரெஞ்சு ஓபனில் அவர்கள் வென்ற 2ஆவது பட்டம் இது. முன்னதாக 2003இல் இங்கு பட்டம் வென்ற பிரையன் சகோதரர்கள், 2005, 2006, 2012 ஆகிய ஆண்டுகளில் இறு தச் சுற்றில் தோல்வி கண்டது குறிப்பிடத்தக்கது.

## அனைவருக்கும் நன்றி


8 ஆவது தடவை கிண்ணம் வென்றது குறித்து நடால் கூறும்போது, 'எனது குடும் பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நான் காயம் காரணமாக விளையாடாமல் இருந்தபோது எனது குடும்பத்தினரின் ஆதரவு கிடைத் திராவிட்டால் இந்த சாதனையை புரிந்திருகக முடியாது. ஃபேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத் தளங்கள் மூலம் எனக்கு வாழ்த் துத் தெரிவித்த அனைவருக்கும் நன்றி. அவர்களின் ஆதரவு எனக்கு நேர் மறையான ஆற்றலைத் தந்தது' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் நேற்று நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகமும் ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதியது. இப் போட்டியில் வெற்றிபெற்ற நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டு கழக அணியினரை படத்தில் காணலாம்.

# தென்னாபிரிக்கா வெற்றி



பாகிஸ்தானுக்கெதிரான சம்பியன்ஸ் தொடரின் 5-வது லீக் போட்டியில் தென்னாபிரிக்க அணி 67 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இங்கிலாந்தில் 7-வதும் இறுதியுமான ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ணத்தொடர் நடைபெற்று வருகிறது.

இதன் நேற்றைய ஆட்டம் பேர்மிங்ஹாமிலுள்ள எட்ஜ்பஸ்டனில் நடைபெற்றது.

இவ்வாட்டத்தில் தென்னாபிரிக்க அணி பாகிஸ்தான் அணியை எதிர்கொண்டது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி, முதலில் துடுப்பெடுத்தாட முடிபு செய்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஹசிம் அம்லாவின் துடுப்பின் உதவியின் மூலம் 50 ஓவர்களின் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 234 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக சிறப்பாக ஆடிய ஹசிம் அம்லா 97 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 81 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். தவிர அணித் தலைவர் ஏபி டி வில்லியர்ஸ் 31 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் இர்பான், யூனைட் கான், ஹபீஸ், அஜ்மல், மலிக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

235 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, தென்னாபிரிக்க வீரர்களின் பந்துகளுக்கு ஈடுகொடுத்து விளையாட முடியாமல் 45 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் அதிகபட்சமாக அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் 55 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் சிறப்பாக பந்துவீசி மக்லரைன் 8 ஓவர்களில் 19 ஓட்டங்களை மாத்திரமே கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லா தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் 2 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட தென்னாபிரிக்க அணி அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டுள்ளது.



கிளிநொச்சி மகாவித்தியாலய பழைய மாணவர்களுக்கும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய பழைய மாணவர்களுக்கும் இடையிலான நட்பு கிண்ண கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அணி 200 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. அவ் இரு அணியினரையும் படத்தில் காணலாம்.

## இன்றைய போட்டி

(கரவெட்டி)

வதிரி டைமண்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 100ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வட மாகாண ரீதியான தெரிவு செய்யப் பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் போட்டியில் அல்வாய் பாரதி B அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் அணி மோதவுள்ளது.(24)

## இராணுவ பயிற்...

அவர்களில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் திடீரென்று குன்னூர் ரயில் நிலையத்தில் புறப்பட்ட ரயில் முன்பு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

அதைத்தொடர்ந்து மற்றவர்கள் குன்னூர் மெயின்ரோட்டில் இருந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் கைது செய்தனர். மொத்தம் 220 பேர் கைது செய்யப்பட்டனர்.

போராட்டக்காரர்கள் இராணுவ முகாமுக்குள் நுழைவதை தடுக்க இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இதற்கு முதலமைச்சர் ஜெயலலிதாவும் கண்டனம் தெரிவித்தார். அவர்களை உடனே திருப்பி அனுப்ப வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு வெலிங்டனில் பயிற்சி அளிக்கப்படுவதற்கு தொடர்ந்து எதிர்ப்பு வலுத்து வருகிறது.

இன்றும் போராட்டக்காரர்கள் இராணுவ முகாமுக்கு வந்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபடலாம் என்று தகவல் வெளியாகி உள்ளது.

இதேவேளை, இராணுவக் கல்லூரிக்கு செல்லும் சாலைகளிலும் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் குன்னூர் வெலிங்டன் இராணுவ கல்லூரி பகுதியில் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது.(எ-11)

## உயிரிழந்தோர்...

தாகவும் பலபிட்டிய பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடும் காற்றுடனான வானிலையால் ஏற்பட்ட விபத்துக்களில் உயிரிழந்த 41 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அஹங்கல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மாத்திரம் 10 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவற்றில் ஏழு சடலங்கள் நேற்றுமுன்தினம் மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தினை அண்மித்த கடற்கரையில் நேற்று இரண்டு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.

இவை தெஹிவளை மற்றும் மொறட்டுவை பகுதியைச் சேர்ந்தவர்களின் சடலங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த சடலங்கள் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை காணாமற்போன மீனவர்களை தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.(எ-11)

## அமைச்சுக்களில்...

யான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

ஒரு அமைச்சின் கீழ்வரும் விடயங்கள் சிக்கலானதாக இருக்கக்கூடாது என்றும் அக்கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிற்சங்க சேவையின் சம்மேளனத்தின் பொதுக்கூட்டத்தில் நேற்று கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்க சேவைகள் இன்று குழம்பிப் போயுள்ளன.

ஒரு அமைச்சரிடம் பல விடயங்கள் கொடுக்கும் போது பொறுப்புக்களை தட்டிக் கழிக்க முடிகின்றது.

ஒரு விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள மாகாண சபை அமைச்சரும் மத்திய அரசாங்க அமைச்சரும் ஒற்றுமையாக வேலை செய்யவேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தோல்விகண்ட திணைக்களத்துக்கு வளிமண்டலவியல் திணைக்களம் நல்லதொரு உதாரணமாகும். அமெரிக்கா நேர காலத்தோடு கொடுத்த எச்சரிக்கையை கூட இந்த திணைக்களம் மக்களுக்கு அறிவிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.(எ-11)

## வயோதிப பெண்...

விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலமானது வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் பிரேதப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த வயோதிபப் பெண்ணின் ஒரு சில நகைகளையும் காணவில்லை என உறவினர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11,24,60)

## அத்வானி...

வும் தனது ராஜினாமா கடிதத்தில் அத்வானி கூறியிருக்கிறார்.

பாஜவின் நிறுவனத் தலைவர்களில் ஒருவரான அத்வானி, இந்த வார இறுதியில் கோவாவில் நடந்த கட்சியின் செயற்குழுக் கூட்டத்துக்கு செல்லவில்லை. அதற்கு அவர், தான் உடல் நலமில்லாது இருப்பதாகக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அத்வானியின் ராஜினாமாவை கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை என அக் கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங் அறிவித்துள்ளார். (எ-11)

## கொழும்பு-...

குறிப்பிட்டார்.

வடக்கு மக்களின் தற்போதைய உடனடித் தேவை அதிவேக விரைவுச் சாலை அல்ல. அவர்கள் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். யுத்தத்தின் பாதிப்புக்களில் இருந்து அவர்கள் இன்னமும் மீளாத நிலையில் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தே முதலில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

யுத்தத்தில் தமது கணவனை இழந்த 87 ஆயிரம் இளம் விதவைகள் வடக்கில் உள்ளனர். இத்தகைய பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு எந்த திட்டங்களையும் இலங்கை அரசு முன்னெடுக்கவில்லை. யுத்தத்தின் போது கணவனை இழந்த அவர்களின் குடும்பங்கள் நீடித்த சுமையை ஏற்க வேண்டியிருக்கிறது.

இத்தகையோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான திட்டங்களை இலங்கை அரசு செயற்படுத்தினால் அது பெரும் [illegible]தடையதாக அமையும். இதுவே வடக்கு- கிழக்கு பகுதி மக்களின் அவசியமானவும் அவசரமானதுமான தேவையாகும். மாறாக அதிவேக விரைவுச் சாலை அல்ல என்றார் சுரேஷ் எம்.பி.

முதலில் வடக்கு மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய அரசு முன்வர வேண்டும். தற்போதுள்ள ஏ-9 வீதியே போக்குவரத்துக்கு போதுமானது. முதலில் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் கண்டுவிட்டு அதன்பின் வேண்டுமானால் சில வருடங்களின் பின்னர் அதிவேக விரைவுச் சாலை குறித்து கவனம் செலுத்தலாம்.

இது தொடர்பாக சீனாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டும்.

10 முதல் 15 வருடங்களுக்கு தற்போதுள்ள ஏ-9 வீதியே போதுமானது. இதனைச் சொல்வதன் மூலம் நாங்கள் வட பகுதியின் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் என்று கருதிவிடக் கூடாது.

எங்களுடைய தற்போதைய கவலை வடக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு தேவையற்ற பிரச்சினையை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்பது தான் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி மேலும் தெரிவித்துள்ளார்.(எ-11)

## இலங்கைப் பிரச்சினை...

விட்டு, இப்போது மீறுவது மத்திய அரசின் இரட்டை வேடத்தைக் காட்டுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார் ஜெயலலிதா.

இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு இரட்டை வேடம் போடுவதாக ஜெயலலிதா குற்றம் சாட்டுகிறார். இதே இலங்கைப் பிரச்சினையில் ஜெயலலிதா போடாத இரட்டை வேடமா?

16.4.2002ல் பிரபாகரனை இலங்கை அரசு கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் முன்மொழிந்தார்.

இந்திய அரசு இலங்கையின் அனுமதியுடன் படையை அனுப்பி, பிரபாகரனை சிறைப் பிடிக்க உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றாரே. அது இரட்டை வேடம் இல்லையா?

அப்பாவித் தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்று குவித்தபோது, இறுதிப் போர் நேரத்தில் ராஜபக்ஷ நடத்தும் யுத்தம் தமிழர்களை எதிர்த்து அல்ல, விடுதலைப் புலிகளை எதிர்த்துதான் என்றாரே அது இரட்டை வேடம் இல்லையா?

17.1.2009ல் இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டும் என இலங்கை இராணுவம் எண்ணவில்லை. ஒரு யுத்தம் நடக்கும் போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம் தான் என்றாரே.. அது இரட்டை வேடமா? கபட நாடகமா?

இவ்வளவையும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகச் செய்துவிட்டு தற்போது மத்திய அரசு இரட்டை வேடம் போடுவதாக கடிதம் எழுதியிருக்கிறார்.

இந்த அறிக்கை மத்திய அரசு இரட்டை வேடம் போடுவதாக ஜெயலலிதா கூறியுள்ள குற்றச்சாட்டுக்கு பதிலே தவிர, இலங்கை இராணுவ வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதை நியாயப்படுத்துவதாக அர்த்தம் ஆகாது என்றும் குறிப்பிட்டுள்ளார் கருணாநிதி.(எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானத்தை...

ள்ளது.

வடக்குப் பிரச்சினையை தேசியப் பிரச்சினையாகக் கருதி தமிழ் சிங்கள அரசியல்வாதிகள் மெய்யாகவே தீர்வுத் திட்டமொன்றை நோக்கி நகர வேண்டும்

13-ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்தல் அல்லது மாற்றங்களை ஏற்படுத்தல் போன்றவற்றைச் செய்யக் கூடாது எனக் கத்தோலிக்க பேராயர் பேரவை கோரியுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக பேச்சுவார்த்தை நடத்தி புதிய அரசியல் சாசனமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

13-ம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் வடக்கில் தேர்தலை நடத்தி அதன் பின்னர் அரசியல் சாசனத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்வது குறித்து கவனம் செலுத்த முடியும் என சுட்டிக்காட்டியுள்ளது.(எ-11)

## ஊரதீவில்...

உயிரிழந்தவராவார்.

இவரது விபத்துத் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு சடலத்தையும் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதோடு சடலத்தைப் பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறு உத்தரவிட்டார். சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-6)

## 13 ஆவது திருத்த...

விக்கிரமரத்ன, வண. டுலிப் டி சிகேரா, திஸ்ஸ ஜெயதிலக்க, அகிலன் கதிர்காமர், தீபிகா உடகம, பேராசிரியர் அர்ஜன அலுவிகார, சீதை திருச்செல்வம், வண. கலாநிதி ஜெயசிறி பீரிஸ், ஆன் அபேசேகர, மனோரி முத்தெட்டுவேகம, ஜே.சி.வெலியமுன, ஜாவிட் யூசுப், கலாநிதி ஏ.சி.விஸ்வலிங்கம், லங்கா நேசையா, பேராசிரியர் கமேனா குணரத்ன, டமரிஸ் விக்கிரமசேகர, கலாநிதி செல்வி திருச்செல்வம், கலாநிதி தேவநேசன் நேசையா, சாந்தி டயஸ், டனிஸ் காசி செட்டி, பிரசன் டி வைசர், விஜயநந்தன, மகேன் தயானந்தா, பேராசிரியர் ரஞ்சினி ஒபேசேகர, சந்திரா ஜெயரத்ன ஆகியோர் கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-11)

## வாடகைக்கு

பருத்தித்துறை நகரத்தில் பிரதான வீதியில் கடைகள் வாடகைக்குண்டு. (2992)

0777561341, 0771298201

## தவறிவிட்டது

சிறிதரன் றெஜித் ஆகிய எனது சாரதி அனுமதிப் பத்திரம், வாகன காப்புறுதிப் பத்திரம், வரிப் பத்திரம் என்பன மாளிப் பாயிலிருந்து மருனார்மடம் வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் உள்ள வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைத்து உதவுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். (2991)

தொடர்பு-0779292811, 0770092865

## காணவில்லை



கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி சின்னப்பு சிரோன்மணி(வயது 70) என்பவரை 09.06.2013 முதல் காணவில்லை. இவரை பற்றிய தகவல் அறிந்தவர்கள் 077284016 அல்லது 0775798115 என்ற இலக்கத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**தகவல்: உறவினர்** (2999)


UK, Australia, Canada, Malaysia, Singapore
விரும்பிய நாடு சென்று பணம் சம்பாதிப்பதற்கான
வருமானத்துடன் கூடிய
தொழிற்பயிற்சி & தொழில் வாய்ப்பு
(உணவு, தங்குமிட வசதி இலவசம்)
வெளிநாட்டு பல்கலைக்கழகப் பிரதிநிதியை
நேரில் சந்தித்து அனுமதி பெற
பிரவேசம் இலவசம்
ஜூன்-15 சனி- யாழ்ப்பாணம்
ஜூன்-16 ஞாயிறு- வவுனியா
ஜூன்-17 திங்கள்- கிளிநொச்சி
ஜூன்-18 செவ்வாய்-மீண்டும் யாழ்ப்பாணம்
முற்பதிவுகளுக்கு 0773 616 798
சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
மி.அ: edusikaram@gmail.com web: www.sikaram.lk
(சி-3582)



FLC FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES
France, Canada, Swiss, Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
இது வரைக்கும் 710 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...
ஆரம்பம் : 22.06.13 Sat at 2pm. No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).
: 24.06.13 Mon at 11am. No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
0779 789 456
English, Deutsch, Italian, & Sinhala வகுப்புக்களும்...
(சி-3579)



NALIN Information Technologies Pvt Ltd.
Nalin City Show Room
116 G, K.K.S Road, Chunnakam.
TP:- 021-2242222, 0777-140431
யாழ் நகரில் மிகச் சிறந்த சேவையை வழங்கிவந்த நாம் வாடிக்கையாளர் நலன் கருதி தற்போது சுன்னாகத்திலும்..
hp மிகக்குறைந்த விலையில்... கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள், கணனி சார் அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம். DELL
சுன்னாகம் சந்தியில் இருந்து காங்கேசன் துறை நோக்கி 300M தொலைவில் K.K.S Road ல் (மாஸ்ரரின் பெற்றோல் செற் அருகில்)
மிகக்குறைந்த கட்டணத்துடன்... DELL அனைத்துவகை கணனிகள், கணனி சார் பொருட்களையும் சிறந்தமுறையில் திருத்திப்பெற்றுக்கொள்ளலாம். hp
(சி-3584)


## வாழ்த்துகின்றோம்




திருமதி வைஷ்ணவி சிறீவரதன் அவர்கள் காப்புறுதித் துறையில் அதி உயர் சர்வதேசவிருதான COT Court of the Tabel விருதை 2 ஆவது தடவையாக அகில இலங்கை ரீதியில் யூனியன் அஷ்யூரன்சில் வென்ற ஒரே ஒரு நபர் இவர் என்பது குறிப்பிடத்தக்க விடயம். மேற்படி விருது தொடர்பான கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காக 2 ஆவது தடவையாக 'அமெரிக்கா' செல்லவுள்ளார். இவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: பிராந்திய முகாமையாளரும், உத்தியோகத்தர்களும், யூனியன் அஸ்யூரன்ஸ் யாழ்ப்பாணக் கிளை.**

(சி-3564)

## வேலைவாய்ப்பு

EPF, ETF உடன் வேலைவாய்ப்பினை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கான நிரந்தர அடிப்படைச் சம்பளத்துடனான வேலைவாய்ப்பு.

**General Insurance : பொதுக்காப்புறுதி**

| பதவிநிலை | பதவி வெற்றிடம் | மொத்தமாக வழங்கப்படும் சம்பளம் |
|---|---|---|
| பதவிநிலை 01 Sales Manager - SM | 02 | ரூ.100,000 |
| பதவிநிலை 02 Assistant Sales Manager ASM | 03 | ரூ.75,000 |
| பதவிநிலை 03 Sales Executive | 05 | ரூ.35,000 |
| பதவிநிலை 04 Executive | 05 | ரூ.30,000 |
| பதவிநிலை 05 Junior Executive | 10 | ரூ.20,000 |

பதவிநிலை 01: ( அனுபவம் : காப்புறுதித் துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது)

பதவிநிலை 04: (A/L சித்தியுடன் திறமையுள்ள இளைஞர், யுவதிகள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

பதவிநிலை 05: (A/L சித்தியுடன் திறமையுள்ள இளைஞர், யுவதிகள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

**Life Insurance** ஆயுள் காப்புறுதி

Sales Manager : 02 } காப்புறுதித் துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது
Assistant Sales Manager : 03 }
Underwriting Staff {Female}: 02 (A/L சித்தியுடன் ஆங்கில கணனி அறிவும் விரும்பத்தக்கது)

**தொடர்புகளுக்கு : 0722068052**

(சி-3565)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org